





# நிழலின் நிறம் சிவப்பு!

## ராஜேஷ்குமார்



எகிப்து நாட்டில் கண்டெடுக்கப்பட்ட,
5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மம்மி.

## 1

கண்ணாடிக்கு முன்பாய் நின்றிருந்த பாக்யா தன் நெற்றியில் இருந்த ஸ்டிக்கர் பொட்டை சரிபார்த்துக் கொண்டே சமையலறைக்கு குரல் கொடுத்தாள்.

''அம்மா...''

''என்னடி... அலங்காரம் முடிஞ்சுதா..?'' சமையலறையிலிருந்து கோகிலாம்பாளின் குரல் கேட்டது.

''ம்... முடிஞ்சுது... என்னோட டிபன் பாக்ஸ் ரெடியா...?''

''ஸ்டூல் மேல எப்பவோ எடுத்து வெச்சாச்சு... பையில் எடுத்துப் போட்டுக்கோ...''

''இன்னிக்கு என்ன சாதம்?''

''தக்காளி...''

''உச்... என்னம்மா சாப்பாடு, நேத்தும் தக்காளி சாதம் இன்னிக்கும் தக்காளி சாதம்...''

''ஏண்டி... சாப்பிட்டா என்ன... நேத்து வாங்கின தக்காளி இன்னிக்கு மீந்து போச்சு. அதை 24 மணி நேரத்துல உபயோகப்படுத்தலைன்னா சாக்கடையில்தான் கொண்டு போய்க் கொட்டணும். உங்கப்பா உயிரோடு இருந்த காலத்துல தினமும் காலையில பழைய சாதம் சாப்டுட்டு மத்தியானம் சாப்பிடறதுக்கும் அதே பழைய சாதத்தை எடுத்துக்கிட்டு போயிடுவார். நீ என்னடான்னா வக்கணையா தக்காளி சாதம் பண்ணிக் கொடுத்தாலும் வேண்டாம்னு சொல்றே?''

''அம்மா...! அப்பாவோட காலம் 1980. நான் 2001. இது ஃபாஸ்ட் ஃபுட் யுகம்... என்னோட ஆபிஸுக்கு வந்து பாரு... ஒவ்வொருத்தியும் விதவிதமான அயிட்டம் பண்ணிக் கொண்டு வர்றா...'' பாக்யா சிணுங்கிக் கொண்டே டிபன்பாக்ஸை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு மறுபடியும் கண்ணாடியில் ஒரு தடவை முகம் பார்த்துக் கொண்டாள்.

பாக்யாவுக்கு ரில்பா பிக்மெண்ட்ஸ் கம்பெனியில் ஸ்டெனோ வேலை. ஏழாயிரம் ரூபாய் சம்பளம்.

''அம்மா நான் வர்றேன்...''

''பார்த்து... பத்திரம்...! இன்னிக்கு வெள்ளிக்கிழமை.



ண்டுமாரியம்மன் கோயிலுக்குப் போகணும். நீ ஆபீஸிலிருந்து வர லேட் பண்ணிடாதே.''

''சரியா ஆறு மணிக்கு வந்துடுவேன்.'' ஸ்லிப்பர்க்குள் கால்களை நுழைத்துக் கொண்டு வானிடி பேக்கை தோளில் சரியாய் மாட்டிக் கொண்டு வாசற்படி இறங்கி வந்தாள்.

மணி சரியாய் ஒன்பதரை. வேகமாய் போனால்தான் பஸ்ஸைப் பிடிக்க முடியும்.

நடந்தாள்.

பத்து நிமிஷ நடையில் பஸ் ஸ்டாப் வந்தது. ஒரு சின்ன கும்பல் பஸ்ஸிற்காக காத்திருந்தது.

பொடி டப்பியை எடுத்து தன் ஆட்காட்டி விரலுக்கும் கட்டை விரலுக்கும் இடையே நடுவில் கணிசமான காரமான பொடிகளை அள்ளிக்கொண்டு தன் பீரங்கி நாசிக்குள் நுழைக்க நேரம் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு பெரியவர். பெரியாஸ்பத்திரிக்கு போகக் காத்திருக்கும் ஒரு காய்ச்சல்காரக் கிழவி. கலர் பார்க்கும் இரண்டு கல்லூரி மாணவர்கள். ஸ்கூல் பேக்குகளோடு நான்கைந்து குழந்தைகள்.

பெரியவரிடம் கேட்டாள் பாக்யா.

''நம்பர் செவன் போயிடுச்சா?''

''இல்லேம்மா... நானும் அதுக்குத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்...''

சில நிமிஷ காத்திருப்பில் ஏழாம் நம்பர் பஸ் ஒரு பெரிய ஜனக்கும்பலை அழைத்துக் கொண்டு மூச்சுத் திணறலோடு வந்து நின்றது. பாக்யா பெண்கள் பக்கமாய் ஏறி கும்பலை அளந்து கொண்டு ஊடுருவி காற்று முகத்துக்கு படும்படியாக நின்று கொண்டாள்.

பதினைந்து நிமிஷ நரகப்பயணம்.

சரியாய் 9.55 க்கு ஆபீஸ் இருந்த தெருமுனையில் இறங்கிக் கொண்டாள் பாக்யா. கக்கத்திலும் பின்னங் கழுத்திலும் வியர்த்துப் போயிருக்க வேகவேகமாய் நடந்தாள் பாக்யா.

ரில்பா பிக்மெண்ட்ஸ் கம்பெனி நான்கு மா
கட்டிடத்தோடு ஆரோக்யமாய் தெரிந்தது. வாசலி
நின்றிருந்த வாட்ச்மேன் பாக்யாவிற்கு வழக்கமா
குட்மார்னிங்கை சொல்ல அவள் தலையசைப்பா
ஏற்றுக் கொண்டு உள்ளே போனாள்.

அலுவலக அறைக்குள் நுழைந்து தன்னுடை
மேஜையைத் தொட்டபோது -

மேஜையின் மேல் இருந்த இண்ட்டர்கா
கூப்பிட்டது. ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ...''

குட்மார்னிங் மிஸ் பாக்யா. நான் ஆபரேட்டர் கும
பேசறேன்.

''குட்மார்னிங்...! என்ன விஷயம் குமார்...?''

''ஒரு அஞ்சு நிமிஷத்துக்கு முந்தி உங்களுக்கு ஒ
போன் கால் வந்தது. உங்க மதர் பேசினாங்க.''

''மதரா...?''

''ஆமா...''

''இப்பத்தானே வீட்லேர்ந்து வர்றேன். என்னோட
மதர் ஏதாவது சொன்னாங்களா?''

''இன்னும் ஒரு பத்து நிமிஷம் கழிச்சு உங்களுக்கு
போன் பண்றதா சொன்னாங்க... அவங்க போன்
பண்ணினதும் உங்களுக்கு கனெக்ஷன் தர்றேன்...''

''தேங்க்யூ...''

பாக்யா அப்படியே நாற்காலிக்கு உட்கார்ந்த
போனுக்காக காத்திருக்க ஆரம்பித்தாள்.

'அம்மா எதற்காக போன் பண்ணியிருப்பாங்க?'
யோசித்து யோசித்து பத்து நிமிஷங்களை
விரட்டியடித்தபோது -

டெலிபோன் கூப்பிட்டது.

எடுத்தாள்.

கோகிலாம்பாள் தான்.

''என்னம்மா...?''

'பாக்யா...! இன்னிக்கு நீ ஆபீஸுக்கு லீ



போட்டுட்டு உடனடியா வீட்டுக்கு வரணும்...'

''இப்பவேவா...?'

''ஆமா...''

''எதுக்கு...?'

''நேர்ல வா... பேசிக்குவோம்...''


''என்னம்மா... நீ புதிர் போடறே! வீட்ல ஒன்பதரை
மணி வரைக்கும் இருந்துட்டுதானே வந்தேன். அப்ப
விஷயம் என்னன்னு சொல்லியிருக்கலாமே...?''

''வளவளன்னு பேசிட்டிருக்காதே! உடனே
புறப்பட்டு வா...''

''அம்மா...! வந்து...''

''இன்னும் அரைமணி நேரத்துக்குள் இங்கே
வந்தாகணும்...''

அம்மா ரிஸீவரை வைத்துவிட பாக்யா ரிஸீவரை
வைக்கத் தோணாமல் அப்படியே நின்றாள்.



17ஆம் நூற்றாண்டில் -
இங்கிலாந்தில் மரண
தண்டனைக் கைதிகளை
தூக்கிலிட
பயன்படுத்தப்பட்ட
சாதனம்.

## 2

கொடைக்கானல் வேகமாய் இருட்டிக் கொண்டு
வந்த அந்த சாயங்கால நேரத்தில் - சந்தன நிற
அம்பாசிடர் கார் ஒன்று கோடை லாட்ஜின்

போர்ட்டிகோவில் பிரயாணக் களைப்போடு வந்து நின்றது. காரின் பின் சீட்டுக் கண்ணாடியில் 'Just Married. Don'ts Disturb them' என்று வேர் சாக்பீஸால் எழுதப்பட்ட வாசகங்கள் ஒருவித குறும்புத் தனத்தோடு மின்னின.

சுபாகரும் மிருதுளாவும் காரினின்றும் சோர்வாய் இறங்கினார்கள். காரிலிருக்கும் லக்கேஜ்களை எடுப்பதற்காக ஓடோடி வந்த வெள்ளுடுப்பு பணியாளிடம் டிக்கி சாவியை நீட்டி விட்டு ஹோட்டலின் வெல்வெட்வேய்ந்த ரிசப்ஷன் அறைக்குள் நுழைந்தார்கள்.

சுபாகர்க்கு இருபத்தெட்டு வயது. மாநிறம். அலட்சியமாய் முன் நெற்றியில் வந்து புரளும் தலைக்கேசத்தின் ஒரு கொத்து அவனுடைய முகத்திற்கு ஒரு எக்ஸ்ட்ரா பர்சனால்டியைக் கொடுத்தது. பிளாஸ்டிக் சர்ஜரியில் உயர்தர பட்டம்.

மிருதுளாவுக்கு இருபத்தியோர் வயது. மாதுளைப் பூ நிறம். வாரம் ஒரு தடவை ப்யூட்டி பார்லர் போய்விட்டு வந்ததில் உடம்பு பொன்னாய் ஜ்வலித்தது. அடுத்த வருஷம் ஏப்ரல் மாதம் ரிடையராகப் போகும் ஜட்ஜ் சக்கரவர்த்தியின் ஒரே மகள். இரண்டு நாட்களுக்கு முன்னால் சென்னை ராஜா முத்தையா திருமண மண்டபத்தில் கல்யாணம். இன்றைக்கு இனிப்பு நிலாவைத் தேடி கொடைக்கானலுக்கு வந்திருக்கிறார்கள்.

சுபாகர் ஹோட்டல் ரிசப்ஷனிஷ்டை நெருங்கினான். அந்த ரிசப்ஷனிஷ்ட் மெல்லிய குரலில் கேட்டாள். ''டாக்டர் சுபாகர்...?''

''எஸ்...''

''ரூம் நம்பர் ஃபோர்ட்டீன்... க்ரௌண்ட் ப்ளோர்...''

சாவியை எடுத்து மேலே வைத்தாள்.

சாவியைப் பொறுக்கிக் கொண்ட சுபாகர் மிருதுளாவோடு இணைந்து நடந்து பணியாள் காட்டின வழியில் ரூம் நம்பர் பதினான்கை நோக்கி நடந்தான்.



மிருதுளா தன் முழங்கையால் சுபாகரின் இடுப்பில் மெல்ல இடித்தாள்.

அவன் அவளை ஏறிட்டான். ''என்ன மிருதுளா?''

''ஹோட்டல் எதிர்பார்த்ததைவிட ரொம்பவும் அமர்க்களமாயிருக்கு...''

''உங்கப்பா செலக்ஷனாச்சே... சோடை போகுமா...?'' சுபாகர் சிரித்துக் கொண்டே அறைக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். ட்யூப்லைட் வெளிச்சத்தில் அறை ரம்யமாய் இருந்தது. க்ரில் கம்பிகளில் பொருத்தப்பட்ட கண்ணாடிக் கதவுகளைப் பூப்போட்ட கர்ட்டன்கள் அடைகாத்தன. சிமெண்ட் நிற உல்லன் போர்வையால் போர்த்தப்பட்ட ஃபோம் மெத்தைகள் புஷ்டியாய் தெரிந்தது.

பணியாள் லக்கேஜ்களை வைத்துவிட்டு நகர்ந்ததும் அறைக் கதவைச் சாத்தி தாழிட்ட சுபாகர் மிருதுளாவை நெருங்கி அவள் இடுப்பில் கையை வைத்தான். ஃபோம் மெத்தையைக் கண்ணால் காட்டினான்.

மிருதுளா திமிறினாள்.

''இப்பவேவா...? நோ... நோ...''

''நேத்தைக்கு ராத்திரி ஊரறிய உனக்கும் எனக்கும் முகூர்த்தம் வெச்சாங்க. நீ மொதல் ராத்திரியே வேண்டாம்னு சொல்லிட்டே... இப்போ கொடைக்கானல் வந்தாச்சு. இங்கே வந்தும் ஊஹூம்ன்னா எப்படி?''

''கார்ல வந்த டயர்ட்... தலை பூராவும் மண்ணு... தூசி... இப்படியே பெட்ல போய் படுத்துக்க முடியுமா? குளிக்க வேண்டாமா?''

''சரி... வா குளிக்கலாம்...''

''நான் எதுக்கு? நீங்க போய் மொதல்ல குளிச்சுட்டு வாங்க... அப்புறம் நான் போறேன்...''

''ரெண்டு பேரும் சேர்ந்து குளிச்சா என்னாவாம்?''

''நோ, நோ, மொதல்ல நீங்க.''

கணவனைப் பிடித்து பாத்ரூமை நோக்கித் தள்ளினாள்

மிருதுளா.

''சோப்பு... டவல்... என்னோட ட்ரஸ்?''

''எல்லாமே நான் கொண்டு வர்றேன். நீங்க போங்க...'' மிருதுளா சொல்ல பாத்ரூமுக்குள் நுழைந்தான் சுபாகர். டவல், சோப்பு, பனியன், ஜட்டி... எல்லாமே மிருதுளா மூலமாய் ஜாக்கிரதையாய் உள்ளே போக பதினைந்து நிமிஷம் செலவழித்து குளித்துவிட்டு வந்தான் சுபாகர். கண்ணாடி முன் நின்று தலையைத் துவட்டிக் கொண்டிருந்த நேரம் மிருதுளா உள்ளாடை சமாச்சாரங்களோடு உள்ளே போனாள். அவள் பாத்ரூம் கதவைத் தாழிட்டுக் கொண்ட அதே நேரம்,

வெளியே -

அறையின் கதவு மெலிதாய் தட்டப்பட்டது.

''டொக்... டொக்...''

பார்த்துக் கொண்டிருந்த கண்ணாடியினின்றும் திரும்பினான் சுபாகர்.

''யாரது...?''

''டொக்... டொக்...''

சுபாகர் எரிச்சலோடு வேகமாய் போய் கதவைத் திறந்தான்.

வெளியே -

மோவாயைத் தேய்த்துக் கொண்டு ஒரு புன்னகையோடு அவன் நின்றிருந்தான். சுபாகரைப் பார்த்ததும் புன்னகையின் அளவைக் கொஞ்சம் பெரிதுபடுத்தினான்.

சுபாகருக்கு பளீரென்று உறைத்தது.

'இவன் சித்தேஸ்வரன்... எம்.பி.பி.எஸ் படிக்கிற காலத்தில் கீழ்ப்பாக்கம் ஹாஸ்டலில் பெயிலாகிப் போக -'

''டேய்... நீ சித்தேஸ்வரன் தானே...?''

''அந்த பாவியேதான்'' அவன் சிரித்தான்.

''உள்ளே வாடா...''

வந்தான். அறையை பார்வையால் கழுவிக்கொண்டே



உட்கார்ந்தான். சுபாகரும் அவனுக்கு எதிரே உட்கார்ந்தபடி கேட்டான். ''சொந்த ஊர் எங்கேயோ நாகர்கோவில் பக்கம்னு சொன்னே... கொடைக்கானல்ல இருக்கே...?''

''இங்கேதான் ப்ராக்டீஸ் பண்ணிட்டிருக்கேன்...''

''எத்தனை நாளா...''

''ஆறு மாசமா. ஹோட்டல் லாபியில உட்கார்ந்து பேப்பர் பார்த்துட்டிருந்தேன். நீயும் உன்னோட மனைவியும் இறங்கி வந்ததைக் கவனிச்சேன். ரீசண்டாதான் மேரேஜ் ஆச்சா...?''

''ரெண்டு நாளாச்சு....நீயெல்லாம் எந்த ஊர்ல குப்பை கொட்டிட்டிருக்கேன்னு தெரியாததினாலத்தான் இன்விடேஷனை அனுப்ப முடியலை. ஆமா உனக்கு கல்யாணமாயிடுச்சா...?''

''இனிமேத்தான்.''

''ஒய்ப் பாத்ரூம்ல இருக்கா. குளிச்சுட்டு வரட்டும்... உனக்கு அறிமுகப்படுத்தி வெக்கறேன்.'' சுபாகர் சொல்லச் சொல்லவே அந்த சித்தேஸ்வரன் எழுந்தான்.

''வேண்டாம். நான் புறப்படறேன். கொடைக்கானல்லே இன்னும் எத்தனை நாள் இருப்பே?''

''மூணு நாள்.''

''லீசரா வந்து பார்க்கிறேன்.'' எழுந்து கதவை நோக்கிப் போன சித்தேஸ்வரன் சட்டென்று நின்றான். கேட்டான்.

''அப்புறம்... அந்த கோமதி விவகாரம் என்னாச்சு சுபாகர்?''

''எந்த கோமதி...?''

''அதான் நீ ஹவுஸ் சர்ஜனா ஸ்டான்லியில் இருந்தப்ப கோமதிங்கற நர்ஸை காதலிச்சியே. அவதான்.''

சுபாகர் முகம் மாறி சட்டென்று குரலைத் தாழ்த்திக் கொண்டான். ''அந்த விவகாரத்தையெல்லாம் ஏண்டா இப்போ கிளர்றே...? அவதான் தற்கொலை

பண்ணிக்கிட்டு செத்துப் போனாளே...''

''அப்போ உனக்கும் அவளுக்கும் பிறந்த குழந்தை?''

கேட்ட சித்தேஸ்வரனை உக்கிரமாய் முறைத்தான் சுபாகர். ''கொஞ்சம் மொள்ளமா பேசுடா... குளிச்சிட்டிருக்கிற என் ஒய்ப்போட காதுல விழுந்துடப் போவுது...''

''சரி வா! ரூமுக்கு வெளியே போயிடலாம்.''

போனார்கள்.

சித்தேஸ்வரன் நடந்து கொண்டே கொஞ்சம் கவலையான குரலில் கேட்டான். ''கோமதி சூஸைட் பண்ணிக்கிட்டாளா...? ஏன்?''

''கல்யாணம் பண்ணிக்கச் சொன்னா - நான் மாட்டேன்னு சொன்னேன். தூக்குல தொங்கிட்டா. அவ பிடிவாதமா பெத்துகிட்ட குழந்தையை வடநாட்டு சேட் ஒருத்தன் தத்து எடுத்துக்கிட்டு போயிட்டானாம்...''

''பாவம்டா அந்த கோமதி... உன்னை ரொம்பவும் நம்பிட்டிருந்தா. நீ இப்படி ஏமாத்துவேன்னு கனவுகூட கண்டிருக்கமாட்டா.''

''நான் எவ்வளவோ தூரம் சொன்னேன்டா - கருவை கலைச்சிருன்னு. அவ பிடிவாதம் புடிச்சா. எங்கோ ஒதுக்குப்புறமா ஒரு கிராமத்திலிருந்த தோழி வீட்ல பத்து மாசம் தங்கி குழந்தையைப் பெத்துகிட்டா... நான் பிளாஸ்டிக் சர்ஜரி கோர்ஸை முடிச்சுட்டு வர்றதுக்குள்ளே கல்யாணம், கல்யாணம்னு அவசரப்பட்டா. 'சர்த்தான் போடி'ன்னு ஒரேடியா கண்ணை மூடிட்டேன். தூக்குல தொங்கிட்டா.''

''சரி, சரி... புதுப் பெண்டாட்டியோட பேர் என்ன?''

''மிருதுளா.''

''பெரிய இடம் போலிருக்கு.''

''ஹை கோர்ட் ஜட்ஜ் சக்கரவர்த்தியோட பொண்ணு.''

''லாட்டரியில பம்பர் அடிச்சிருக்கிற மாதிரி அடிச்சிருக்கே! ஜமாய். நான் வரட்டா...? நீ ஊரை விட்டு போறதுக்குள்ளே முடிஞ்சா நான் வந்து பார்க்கிறேன்.''



சொல்லிவிட்டு - சித்தேஸ்வரன் நகர்ந்து போக - சுபாகர் தன் அறைக்குத் திரும்பினான். மிருதுளா பாத்ரூமிலிருந்து வெளிப்பட்டு வேறு சேலைக்குள் இருந்தாள். குளித்ததில் முகம் பிரகாசம் அடித்தது. சோப்பு மணமும் மெலிதான செண்ட் மணமும் கும்மென்று மணத்தது.

''எங்கே போயிட்டீங்க?''

''ஒரு ஃப்ரெண்ட் வந்திருந்தான்...''

''யாரு?'

''அவனும் ஒரு டாக்டர்தான். நானும் அவனும் ஒண்ணாத்தான் படிச்சோம். கொடைக்கானல்ல பிராக்டீஸ் பண்ணிட்டிருக்கானாம்... ஹோட்டல் லாபியில் என்னைப் பாத்துட்டு ரூமுக்கு வந்திருக்கான்.''

''வந்தவர் ஏன் உடனே போயிட்டார்?''

''ஏதோ அர்ஜெண்டா வேலை இருக்காம். நாளைக்கு வர்றேன்னு போயிட்டான். இங்கிதம் தெரிஞ்சவன்'' சொல்லிக்கொண்டே மிருதுளாவின் தோள் மேல் கையை வைத்தான் சுபாகர். ''குளிச்சதும் அமர்க்களமா இருக்கே மிருதுளா.''

''எம் மேல இருக்கிற கையை எடுங்க.''

''ஏன்?''

''மொதல்ல எடுங்க சொல்றேன்.''

''ஏன்?''

''வந்தவர் யார்ன்னு சொன்னீங்க?''

''என்னோட ஃப்ரெண்ட்?''


''அவர் பொய் பேசமாட்டாரே...?''

''மிருதுளா... நீ பேசறது என்னான்னு எனக்குப் புரியலை.''

''புரியும்படியாவே பேசட்டுங்களா?''

''ம்...''

''அந்தக் கோமதியைப் பற்றி நீங்களும் அவரும் ஏதோ பேசினீங்க... அந்தப் பெண்ணைப் பத்தி நான் தெரிஞ்சிக்க விரும்பறேன்.''



15 ஆம் நூற்றாண்டில் - இத்தாலி நாட்டில் பயன்படுத்தப்பட்ட போர்க்கருவி (சம்மட்டி போன்ற அமைப்பு)

# 3

ரிஸிவரை வைத்த பாக்யா, ரிசப்ஷன் கௌண்டரை விட்டு வெளியே வந்து - மானேஜிங் டைரக்டர் ரகோத்தமராவின் அறையை நோக்கிப் போனாள்.

'காலையில் வந்ததும் வராததுமாய் லீவு சொன்னால் - எம்.டி. ஏதாவது எரிந்து விழுவாரோ..?' யோசித்துக் கொண்டே பேரனதில் எம்.டி.யின் அறை வந்திருந்தது. ஆட்காட்டி விரலை கொக்கி மாதிரி மடக்கி டொக், டொக் என்று தட்டினாள்.

''எஸ்... கம்... இன்...''

ப்ளஷ் டோரைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். மெல்லிய குரலில் சொன்னாள். ''ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ் ஸார்...''

உட்கார சீட்டைக் காட்டிக் கொண்டே கேட்டார் எம்.டி... ''என்ன விஷயம்?''

''எனக்கு இன்னிக்கு ஒரு நாள் லீவு வேணும் ஸார்.''

எம்.டி.மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு நெற்றியைச் சுருக்கினார். ''லீவா? எதுக்கு?''

''அம்மா டெலிபோன் பண்ணியிருந்தாங்க ஸார்... என்னை யாரோ பெண் பார்க்க வரப்போறதா சொன்னாங்க...'' வாய்க்கு வந்த பொய்யைச்



சொன்னாள்.

''காலையில வரும்போது உனக்குத் தெரியலையா?''

''தெரியலை ஸார்...''

''சரி... நீ கிளம்பு.''

பாக்யா ''தேங்க்ஸ்'' ஒன்றை உதிர்த்துவிட்டு - கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். மனசு பூராவும் அந்த ஒரு கேள்வியால் அலைந்தது.

'அம்மா எதற்காக கூப்பிட்டிருப்பாள்...?'

'ஊரிலிருந்து ஏதாவது ஒரு உறவுக்கூட்டம் வந்திருக்குமா...?' யோசித்துக் கொண்டே கௌண்ட்டர்க்கு வந்து டம்பப்பையை எடுத்து தோளுக்குக் கொடுத்துக் கொண்டு ஆபீஸை விட்டு வெளியே வந்தாள். காலியாய்ப் போன ஆட்டோ ஒன்றை நிறுத்தி உள்ளே நிரம்பி 'ராமானுஜ நகர்' என்றாள்.

ஆட்டோ பீறிட்டது.

பத்து நிமிஷ பயணம்.

வீட்டு வாசலில் ஆட்டோ நிற்க - அம்மாக்காரி வாசலிலேயே நின்று எதிர்கொண்டாள். பாக்யா காசைக் கொடுத்து ஆட்டோவை அனுப்பிவிட்டு அம்மாவை நெருங்கினாள்.

''என்னம்மா... என்ன விஷயம்?''

''உள்ளே வாடி... சொல்றேன்.''

உள்ளே போனதும் - மகளை உட்கார்த்தி வைத்துக் கொண்டு மெல்லிய குரலில் சொன்னாள் கோகிலாம்பாள்.

''இன்னும் ஒரு மணி நேரத்துல உன்னை பெண் பார்க்க வரப் போறாங்க பாக்யா. அந்த இருச்சி என்ஜினியர் வீட்டு சம்பந்தம்.''

ஆச்சர்யமானாள் பாக்யா.

''அவங்க அம்பது பவுன் கேட்டவங்களாச்சே... உனக்கு யார் சொன்னா!''

''நீ ஆபீஸுக்குப் புறப்பட்டுப் போனதும் தரகர் வந்திருந்தார். நான் உன்னைக் கூப்பிடறதுக்காக பஸ்

ஸ்டாண்டுக்கு வர்றதுக்குள்ளே நீ பஸ்ஸில் ஏறிட்டே அதான் உடனடியா உன்னோட ஆபீசுக்குப் போன் பண்ணினேன்.''


''அவங்க எத்தனை மணிக்கு வர்றாங்களாம்?''

''இன்னும் ஒரு மணி நேரத்துல.''

''அப்போ... நான் அலங்காரம் பண்ணிக்கணும்ன்னு சொல்றே...?''

''ஆமா, இன்னொரு தரம் மூஞ்சியை அலம்பிடு வேர்த்துப்போய் என்னமோ மாதிரி இருக்கே.''

''ம்... ம்...'' தோளில் இருந்த டம்பப்பையை எடுத்து சுவரின் ஆணியில் மாட்டி ஊசலாட விட்டுவிட்டு குளியலறைக்குள் நுழைந்தாள் பாக்யா.



**18 ஆம் நூற்றாண்டில் மரண தண்டனைக் கைதிகளை இரும்புச் சங்கிலியை இறுக்கி மிகக் கொடூரமாக தூக்கிலிடப் பயன்படுத்தப்பட்ட சாதனம்** (gibbet cage).

## 4

சுபாகர் திடுக்கிட்டான்.

''கோமதியா? யார் அது?'' - கேட்ட அவனை புன்னகையோடு பார்த்தாள் மிருதுளா.

''இதோ பாருங்க... நீங்க ஒரு டாக்டர். பொய் பேசறது சரியில்லை. நீங்களும் உங்க ஃப்ரெண்டும் பேசினதை



நான் கேட்டுட்டேன். பாதிதான் கேட்டேன். மீதியைக் கேக்கிறதுக்குள்ளே நீங்க வெளியே கூட்டிக்கிட்டு போயிட்டீங்க...''

சுபாகரின் முகம் சுட்ட சுண்ணாம்பானது. மிருதுளா குரல் உயர்ந்தது.

''உங்க கையாலே தாலி வாங்கி இன்னும் முழுசா மூணு நாள்கூட ஆகலை. அதுக்குள்ளே நீங்க பொய் பேச ஆரம்பிச்சுட்டீங்க.''

''அது... வந்து... வந்து... மிருதுளா...''

''ம்... சொல்லுங்க... யாரந்த கோமதி?''

''என்னோட மெடிக்கல் காலேஜ் லைஃப்ல கோமதிங்கற ஒரு பொண்ணும் நானும் ஃப்ரண்ட்ஸாயிருந்தோம். எங்களுக்குள்ளே எந்தவிதமான தப்பான உறவும் கிடையாது. ஜஸ்ட் வீ வேர் ஃப்ரண்ட்ஸ். அவ்வளவுதான்.''

''அந்த பொண்ணு இப்போ எங்கே இருக்கா?''

''தெரியலை. அவளுக்கு சொந்த ஊர் திருநெல்வேலி. அங்கே போயிருக்கலாம். அவ நர்ஸ் ட்ரெயினிங் எடுத்திருந்தா.''

''நீங்க பொய் பேசப் பேச... எனக்கு சந்தேகம் அதிகமாயிட்டே போகுது. அந்தப் பொண்ணு கோமதி தற்கொலை பண்ணிக்கிட்டா... உங்க ஃப்ரண்ட் சித்தேஸ்வரன் சொல்லிட்டிருந்தாரே...?''

''மி... ரு... து... ளா...''

''நான்தான் சொன்னேனே - நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டதை அட்சரசுத்தமா கேட்டுட்டேன்னு. அந்தக் கோமதியைப் பத்தி நான் சொல்லட்டுங்களா? நீங்க ஹவுஸ் சர்ஜனா இருந்தப்ப அந்தக் கோமதியோட பழகியிருக்கீங்க. அவ கர்ப்பம் ஆயிட்டா. நீங்க கலைக்கச் சொன்னீங்க. அவ மாட்டேன்னுட்டா. நீங்க எப்படியும் அவளைக் கல்யாணம் பண்ணிக்குவீங்கங்கிற நம்பிக்கையில அவ குழந்தையைப் பெத்துக்கிட்டா. நீங்க அவளைக் கல்யாணம் பண்ணமாட்டீங்கன்னு

தெரிஞ்சதுமே அந்தக் கோமதி த[illegible]கொலை பண்ணிக்கிட்டு செத்துப் போனா...! நான் சொன்னதெல்லாம் சரிதானே?''

சுபாகர் பேசாமல் மௌனம் சாதித்தான்.

மிருதுளா கோபமாய் தொடர்ந்தாள். ''ஒரு பொண்ணோட வாழ்க்கையை நாசம் பண்ணிட்டு இன்னொரு பொண்ணோட கழுத்துல தாலியைக் கட்ட உங்களுக்கெல்லாம் எப்படிங்க மனசு வருது?''

''மிருதுளா...''

''சே! உங்களைப் பத்தி நான் எவ்வளவோ மதிப்பா நினைச்சிருந்தேன். கடைசியில ஒரு லோஃபர் மாதிரி... பிஹேவ் பண்ணியிருக்கீங்க...''

''ஸாரி மிருதுளா.''

''யாரோட காலையோ மிதிச்சுட்டு சாவதானமா ஸாரி சொல்ற மாதிரி, இதுக்கும் ஸாரி சொல்றீங்களே? உங்களுக்கு இது சரியா படுதா?''

''நான் அந்தக் கோமதியைக் கல்யாணம் பண்ணிக்கத்தான் இருந்தேன் மிருதுளா. அவதான் அவசரப்பட்டுத் தற்கொலை பண்ணிக்கிட்டா.''

''செத்துப் போனவ சாட்சி சொல்ல வரமாட்டாங்கற தைரியத்துல இப்போ ஒரு புதுப் பொய்யைச் சொல்றீங்க. ஆம்பிளைங்க எல்லாருமே ஒரே மாதிரியாகத்தான் இருப்பாங்களா?''

சுபாகர் கொஞ்சம் கோபமாய் நிமிர்ந்தான்.

''மிருதுளா... என்னிக்கோ நடந்துபோன பழசையெல்லாம் பேசிட்டிருந்தா ஒரு பிரயோஜனமும் இல்லை.''

''எனக்கு பிரயோஜனமா இருக்குங்க... நீங்க எப்பேர்ப்பட்ட 'உத்தமர்'ங்கிற ரிசல்ட் எனக்கு கிடைச்சிருக்குங்க...''

''சரி... இப்போ என்ன பண்ணனும்ங்கிறே?''

''நீங்க எனக்குக் கொடுத்த இந்த ஷாக் ட்ரீட்மெண்ட் தெளிய கொஞ்ச நாளாகும். ஆனா என்னோட முடிவை



நான் இப்பவே சொல்லிடறேன். நான் ஒரு ப்யூரிடன். ஸ்டில் அ'யம் வெர்ஜின்... எந்த ஆண்மகனோட கரமும் என்மேல் பட்டதில்லை. தாலிகட்டப் போகிற நபர்க்கு நான் சுத்தமாகக் கிடைக்கவேண்டுமே என்பதற்காக கட்டுப்பாட்டோடு வாழ்ந்தவள். எனக்கு வரப்போகிற கணவனும் அப்படியே இருக்க வேண்டும் என்று நினைத்தவள்...''

சுபாகர் அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க - மிருதுளா தொடர்ந்தாள்.

''ஒரு பொண்ணைத் தொட்டு தாயாக்கி - அவளை சாகவிட்ட கையாலே நீங்க என்னைத் தொடறதை நான் விரும்பலை மிஸ்டர் சுபாகர். கொடைக்கானலை நாம மிதிச்ச நேரம் சரியில்லை. உடனடியா ஊர் திரும்பினா, அப்பா ஆயிரத்தெட்டு கேள்வி கேப்பார். ஸோ... கொடைக்கானல் வந்தது வந்துட்டோம்... ரெண்டு நாள் இருந்துட்டு மெட்ராஸ் போயிடுவோம். மெட்ராஸ் போனதும் ஒரு நல்ல லாயராப் பார்த்து டைவோர்ஸுக்கு பைல் பண்ணுவோம்.''

''மி... மிருதுளா...''

''என்னைப் பத்தி உங்களுக்குத் தெரியாது மிஸ்டர் சுபாகர். நான் மற்றப் பெண்கள் மாதிரி அழுது புலம்புகிற ரகம் கிடையாது. எங்கப்பா என்னை அப்படி வளர்க்கவும் இல்லை. நான் ஷாப்பிங் போனா எந்தக் கடைக்காரனும் என்னை ஏமாத்தி ஒரு பொருளை தலையில கட்ட முடியாது. நான் ஏமாறவும் மாட்டேன். ஆனா ஒரு நல்ல ஹஸ்பெண்டை தேர்ந்தெடுக்க நான் தவறிட்டேன்.''

சுபாகர் குறுக்கிட்டான்.

''மிருதுளா, நீ பேசறது, நடந்துக்கப் போறது எல்லாமே பைத்தியக்காரத்தனம். என்னிக்கோ நடந்து போன சம்பவங்களுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்.''

''யார்கிட்ட மன்னிப்பு கேட்டுக்கறீங்க? அந்தக் கோமதிகிட்டவா? இல்லே என்கிட்டவா?''

''உன்கிட்டத்தான்.''

''ரப்பிஷ்! என்கிட்ட மன்னிப்பு கேட்டா எல்லாமே சரியாப் போயிடுமா? கல்யாணத்துக்கு முன்னாடி எவளையாவது தொட்டு நாசமாக்க வேண்டியது. கல்யாணத்துக்குப் பின்னாடி விஷயம் தெரிஞ்சதும் புதுப் பொண்டாட்டிகிட்ட மன்னிப்புக் கேட்டுக்க வேண்டியது.''

சுபாகர் கோபமானான். விருட்டென்று அவளுடைய தோளைப் பற்றினான். ''என்னடி சும்மா பேசிட்டுப் போறே?''

''மொதல்ல உங்க கையை எடுங்க.''

''எடுக்கலைன்னா?''

''எடுக்க வெப்பேன்.''

''எங்கே...' எடுக்க வை பார்க்கலாம்?''

சுபாகர் இன்னமும் அழுத்தமாய் மிருதுளாவின் தோள்பட்டையை அழுத்திப் பிடித்தான்.

அடுத்த விநாடி -

'ர்ர்ர்ரப்'பென்று - சுபாகரின் கையைத் தட்டிவிட்டாள் மிருதுளா. ''மிஸ்டர் சுபாகர்! உங்க முரட்டுத் தனத்தை நீங்க என்கிட்டே காட்ட வேண்டாம். நீங்களும் நானும் ஒரு ஜெண்டில்மேன் அக்ரிமெண்ட் செய்து கொள்ளலாம். கொடைக்கானலில் ரெண்டு நாள் இருந்துவிட்டு மெட்ராஸ் போய் சேர்கிற வரைக்கும்... நீங்களும் நானும் பேசிக்கொள்ள வேண்டாம். ஒரே ரூம்ல இருப்போம்... ஒண்ணாவே சாப்பிடுவோம். ரெண்டு நாளும் மௌனமா டி.வி. பார்ப்போம்...''


''இதுக்கு ஒரே ஒரு வழி டைவர்ஸ்தான்னு முடிவு பண்ணிட்டே?''

''ஆமா.''

''ஒரு அற்ப காரணத்துக்காக உன் தலையில நீயே மண்ணை வாரிப் போட்டுக்கப் போறே. நல்லா யோசி மிருதுளா.''



அவளுடைய செழிப்பான முதுகுக்குப் பின்னால் - நெருப்பாய் முறைத்தான் சுபாகர்.




## 5

''பொண்ணைப் பத்தி எந்தக் குத்தமும் சொல்ல முடியாது. குத்துவிளக்கு மாதிரி இருக்கா... எங்களுக்கெல்லாம் ரொம்பப் பிடித்தம்.''

மாப்பிள்ளையின் அப்பா உற்சாகமான குரலில் சொல்லிக் கொண்டே போக - கோகிலாம்பாளின் முகம் பிரகாசத்திற்குப் போனது. பாக்யா ஜன்னல் கம்பிகளுக்குக் கூர்மையைக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

மாப்பிள்ளையின் அம்மாக்காரி தன் மெகாப்போன் தொண்டையைத் திறந்து பேச ஆரம்பித்தாள். ''பொண்ணை நாம ஏற்கெனவே கோயில்ல பார்த்து ஓகே சொன்னதுதானே, நகை போடற விஷயத்தைக் கொஞ்சம் பேசி முடிச்சுட்டா... முகூர்த்த தேதியைக்

குறிச்சுடலாம்...''

தரகர் கோகிலாம்பாளை ஏறிட்டார்.

''நீங்க என்னம்மா சொல்றீங்க?''

''பொண்ணு உத்தியோகத்துக்கு போய் இப்பத்தான் தலையெடுத்திருக்கா. கையில இருக்கிறது பத்து சவரன் தேறும். அதுக்கு மேலே எங்களாலே முடியாது.''

''ஒரே பொண்ணுதானே... கடனோ உடனோ வாங்கி பண்ண வேண்டியதுதானே? எல்லாரும் கையில பணத்தை வெச்சுகிட்டா பொண்ணுக்கும் பையனுக்கும் கல்யாணம் பண்றாங்க?'' மாப்பிள்ளையின் அப்பா சொன்னார்.

''மன்னிக்கணும்... நாங்க கடன்பட்டுக் கல்யாணம் பண்ண விரும்பலை. உத்தியோகத்துக்குப் போற பொண்ணு... கைநிறைய சம்பாதிக்கிறா... நாளைக்கு அவளாலே நிறைய நகை செய்ய முடியும்...''

''இப்படி பிடிவாதமா ஒரே வார்த்தையில நின்னா எப்படிம்மா... கொஞ்சம் தழைஞ்சு வாங்க...'' தரகர் சொன்ன அதே நேரம் -

உள்ளறையிலிருந்து ஒரு சின்னப்புயல் மாதிரி வெளிப்பட்டாள் பாக்யா. உட்கார்ந்திருந்த அத்தனை பேரும் விருட்டென்று நிமிர்ந்தார்கள். பாக்யா கூப்பிட்டாள்.

''தரகர் அய்யா...''

''என்னம்மா...?''

''என் உடம்புல ஏதாச்சும் ஊனம் இருக்கா?''

''......'' தரகர் வாயடைத்துப்போய் மௌனம் காத்தார்.

''இல்லே... நான் கெட்டுப் போனவளா?''

''......''

''ஒரு ஏலக்கடைக்கு கூட்டிட்டுப் போக வேண்டியவங்களை எதுக்காக பொண்ணு பார்க்க கூட்டிட்டு வந்தீங்க?''

கோகிலாம்பாள் பதட்டமாய் எழுந்தாள்.



''டீ... பாக்யா...''

''நீ சும்மா இரம்மா...! பொண்ணைப் பார்க்காம பொன்னைத் தேடற இவங்க வீட்டுக்கு நான் மருமகளா போனா ஒரு நாள்கூட என்னால வாழ்க்கை நடத்த முடியாது. இப்போ நம்ம வீட்ல இவங்க சாப்பிட்ட ஸ்வீட், காரம், காப்பிக்கு செலவழிச்ச காசை ஒரு கோயில் உண்டியில் போட்டிருந்தாக்கூட நம்ம கணக்குல கொஞ்சம் புண்ணியம் சேரும்...''

''பாக்யா... உள்ளே போடீ...''

''நான் போகமாட்டேன்.'' அம்மாவிடம் சொன்னவள் சரேலென்று மாப்பிள்ளை பையனிடம் திரும்பினாள்.

''மாப்பிள்ளை சார்...! இப்பேர்ப்பட்ட அம்மா அப்பாவுக்கு மகனாகப் பொறந்ததுக்காக நீங்க வெட்கப்படணும். ஒரு பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டு உங்க சம்பாத்தியத்துல அந்த பொண்ணுக்கு நகை பண்ணிப் போட முடியாதா?''

மாப்பிள்ளை பையன் முகம் சிவந்து போய்... தன் அப்பா அம்மாவைப் பார்த்தான். அவர்கள் உட்கார்ந்திருந்த நாற்காலிகளை விட்டு எழுந்தார்கள்.

''ஒரு பொண்ணுக்கு இந்த வாய் கூடாது?''

''உங்களுக்கு இவ்வளவு பேராசை கூடாது.''

''பாக்யா...''

''நீ சும்மா இரம்மா...! நான் விரட்டற விரட்டுல நாளைக்கு இன்னொரு இடத்துக்குப் பெண் கேக்கப் போனா பத்துப்பவுன் குறைச்சு கேக்கணும்...''


மாப்பிள்ளையின் அம்மாக்காரி முணகினாள்.

''பெரிய ராங்கிக்காரி போலிருக்கு...''

''உங்களை மாதிரியான பொம்பளைங்களுக்கு நான் ராங்கிக்காரிதான். உங்க பையனைக் கூட்டிக்கிட்டு போய் பொள்ளாச்சி சந்தையில நிறுத்தி - ''அம்பது பவுன் அம்பது பவுன்னு ஏலம் போடுங்க. வழியில போற இராக்கி ஏதாவது மாட்டும்.''

''பாக்யா...''

வீறிட்ட அம்மாக்காரி கோகிலாம்பாள் நெஞ்சைப் பற்றிக்கொண்டு கவரோரமாய் சுருண்டு விழுந்தாள்.



**17 ஆம் நூற்றாண்டில் ஸ்பானிய - அமெரிக்கக் கடலோரக் கொள்ளைக்காரர்கள் பயன்படுத்திய கத்தி.**

## 6

கொடைக்கானலுக்கு வெளியே குளிர் உச்சபட்சத்தில் இருந்தாலும் பூடுக்கையில் புரண்டு கொண்டிருந்த சுபாகரின் மனசில் அனல் அடித்துக் கொண்டிருந்தது. இரவு பதினோரு மணி.

'மிருதுளா என்னை விவாகரத்து செய்யப் போகிற விஷயம் எவ்வளவு பெரிய அவமானம்? ஊர் பூராவும் விஷயம் பரவி கோர்ட்டில் வக்கீல் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லி... சே...!'

சுபாகர் திரும்பிப் படுத்தான். கொடைக்கானலுக்கு வந்து இன்றோடு மூன்றாவ்து நாள். தீர்மானமான பிடிவாதத்தோடு கட்டிலை சுவரோரமாய் தள்ளிப் போட்டுக் கொண்டு தூங்கும் மிருதுளாவையே வெறிக்கப் பார்த்தான். உல்லன் போர்வைக்குள் நிச்சலனமாய் தூங்கும் மிருதுளாவின் அந்த மெத்தனம் அவனுக்குள் எரிச்சலைக் கிளப்பியது.

மூளையின் ஒரு முக்கியமான செல் அவனுக்கு ஒரு யோசனையைச் சொல்லிக் கொடுத்தது.



'கொடைக்கானலில் இருந்து மிருதுளா உயிரோடு மெட்ராஸுக்குப் போனால்தானே... அந்த டைவோர்ஸ் விவகாரம் விஸ்வரூபம் எடுக்கும்? அவள் உயிரோடு இருந்தால்தானே கோமதி பற்றின என்னோட விஷயங்கள் வெளியே வரும்?'

'அவளுடைய வாயை இங்கேயே சாத்திவிட்டால்...'

'செய்... அதுதான் உத்தமம்!'

'இவள் உயிரோடு இருந்தால் நாளைக்கு உன் விவகாரம் ஊர் பூராவும் சிரிப்பாய் சிரிக்கும். ஒரு டாக்டர் நீ. இப்படி அவமானப் படலாமா...?'

'எப்படி அவளை முடிப்பது...?'

'யோசி...!'

'அவள் தற்கொலை செய்து கொண்டு செத்துப் போன மாதிரி இருக்க வேண்டும். அவள் கொலை செய்யப்பட்டிருக்க கூடும் என்கிற சாயலே ஒரு சதவீதம் கூட வரக்கடாது. கடந்த இரண்டு நாட்களில் ஹோட்டலின் அமைப்பு மனப்பாடமாயிருக்க சுபாகர் தீவிரமாய் யோசிக்க ஆரம்பித்தான். கட்டிலினின்றும் எழுந்து சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டு லைட்டரையும் சிகரெட் பாக்கெட்டையும் எடுத்தான். உதட்டில் சிகரெட்டைப் பொருத்தி அதற்கு தகனக் கிரியை நடத்திக் கொண்டே, தூங்குகிற மிருதுளாவைப் பார்த்தான்.

அவள் அயர்ந்து போய் தூங்குவது தெரிந்தது.

'பணக்காரப் பொட்டை நாய்.'

'பணம் இருக்கிற திமிரில்தானே உனக்கு புருஷன் வேண்டாம்...?'

'உன்னை சுமங்கலியாவே வழியனுப்பறேன்...'

சிகரெட்டுகள் வரிசையாய் சாம்பலாகி சாம்பலாகி ஆஷ்ட்ரேயில் நிரம்ப அந்த விடியற்காலை நான்கு மணியில் சுபாகர் அந்த யோசனையைச் செயல்படுத்த எழுந்தான். லேசாய் திறந்து கிடந்த ஜன்னல்களைச் சாத்தினான். கட்டிலுக்குக் கீழே இருந்த ஷூ

சாக்ஸ்களைத் தன்னுடைய இரண்டு கைகளுக்கும் உரையாய் மாட்டிக் கொண்டு மிருதுளாவைத் திரும்பிப் பார்த்தான்.



**16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்தில் பயன்படுத்தப்பட்ட கை விலங்குகள். இதன் எடை 7 கிலோவிற்கும் அதிகம்.**

# 7

மேனேஜிங் டைரக்டர் ரகோத்தமராவ் வழக்கமான சாயந்தர நேரக் குளியலை முடித்துக் கொண்டு - பாத்ரூமினின்றும் வெளிவந்தவர், மாடி அறை ஷோபாவில் நிரம்பியிருந்தார். எதிரே பச்சை நிற ஷாம்பேயின் நிரம்பிய கண்ணாடி டம்ளர் டீபாயின் மேல் உட்கார்ந்திருந்தது. தலைக்கு மேலே மின் விசிறி சாவதானமாய் சுழன்று கொண்டிருந்தது.

ஷாம்பேயினை எடுத்து ஒரு வாய் சப்பியவர், அருகே இருந்த இண்ட்டர்காம் குயிலாகக் கூவியதும் ரிஸீவரை எடுத்து சட்டையில் தேய்த்து உதட்டுக்குக் கொடுத்தார்.

''எஸ்...''

''ஸார் நான் திவாகர் பேசறேன்...''

அவருடைய பி.ஏ. திவாகர் சொன்னான்.

''சொல்லு...''

''நம்ம லாயர் உங்ககூட பேசணுமாம்... லைன்ல



இருக்கார் ஸார். கனெக்ஷன் தரட்டுமா ஸார்...?''

''குடு...''

மறுபடியும் ஒரு வாய் ஷாம்பேயினை சப்புவதற்குள் மறுமுனையில் லாயரின் குரல் அமர்க்களமாய் கேட்டது.

''வணக்கம் ஸார்...''

''என்ன விஷயம் சொல்லுங்க...''

''உங்க தம்பியோட சன் சுபாகர் உங்க மேலே போட்டிருக்கிற கேஸ் அடுத்த வாரம் கோர்ட்டுக்கு வருது. நீங்க கோர்ட்ல ஆஜராக வேண்டியிருக்கும்.''

''சுபாகரோட வக்கீல் ஏதோ காம்ப்ரமைஸுக்கு வரப்போறதா சொன்னீங்களே லாயர் ஸார்... அந்த விவகாரம் என்னாச்சு?''

''அது சரிப்பட்டு வராது.''

''ஏன் அப்படி சொல்றீங்க?''

''உங்க தம்பியோட சொத்து பூராவும் நீங்க ஏமாத்தி வாங்கிட்டதா - சுபாகர் உங்க மேலே ஸூட் ஃபைல் பண்ணியிருக்கார். காம்ப்ரமைஸுக்கு வந்த லாயர் நிறைய கண்டிஷன் போடறார். சொத்தை நீங்க ஏமாத்தி வாங்கிட்டதா அவங்க நியமிக்கிற பஞ்சாயத்து முன்னாடி நீங்க ஒத்துக்கணுமாம். இப்போ நீங்க நிர்வாகம் பண்ணிட்டிருக்கிற கம்பெனியில - சுபாகருக்கு டைரக்டர் அந்தஸ்து போஸ்ட் தரணுமாம்.''

''ரிடிகுல... ஸ்.''

ஷாம்பேயினை வேகமாக உறிஞ்சி விட்டு காலி டம்ளரை 'டொக்' கென்று ஆத்திரமாய் வைத்தார் ரகோத்தமராவ். ''கோர்ட்டுக்கு கேஸ் என்னிக்கு வருது?''

''அடுத்த வாரம்...''

''நான் கோர்ட்டுக்கு கண்டிப்பா வரணுமா லாயர் ஸார்?''

''வரணும்... பத்து நிமிஷத்துல போயிட்லாம்...''

''வர்றேன்...'' ரிஸீவரை வைத்துவிட்டு முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளை புறங்கையால்

ஒற்றிக் கொண்டார். 'ராஸ்கல்' என்று சொல்லி பொய்ப்பல் செட்டை அறைத்தார்.

மறுபடியும் 'இண்ட்டர்காம்' கூப்பிட ரிஸீவரை எடுத்தார்.

''எஸ்...''

''ஸார் உங்களைப் பார்க்க மிஸ் பாக்யா வந்திருக்காங்க...''

''கம்பெனி ஸ்டெனோ பாக்யாவா?''

''எஸ் ஸார்...''

''மேலே வரச் சொல்லு.''

''எஸ் ஸார்.''

ரிஸீவர்கள் வைக்கப்பட்டு - அரை நிமிஷ அவகாசத்திற்குப் பின் - பூாக்யா மாடியறையின் முகப்பில் தோன்றினாள். முகத்தின் பிரகாசம் குறைந்திருந்தது. தலை கலைந்திருக்க - நெற்றியின் மையத்தில் வழக்கமாய் காணப்படும் பொட்டு காணாமல் போயிருந்தது.

''வா பாக்யா.''

''ஸா... ர்.''

''உக்காரு.''

பாக்யா உட்காராமல் குரல் தழுதழுத்தாள். ''ஸார்...ர்...''

''என்ன விஷயம்? ஏன் ஒரு மாதிரி இருக்கே? பொண்ணு பார்க்க வந்தவங்க வந்துட்டுப் போயிட்டாங்களா?''

''போ... போயிட்டாங்க ஸார்...''

''என்னாச்சு?''

பாக்யாவின் குரல் வெடித்தது. ''ஸார்... என்னோட மதரை ஹாஸ்பிட்டல்ல சேர்த்திருக்கேன்.''

''அட... ஏன்?''

''திடீர்னு ஹார்ட் அட்டாக் மாதிரி வந்தது ஸார். ஹாஸ்பிட்டல் கொண்டு போனேன். கார்டியாலஜிஸ்ட் பார்த்தார். இன்னொரு அட்டாக் வர்றதுக்குள்ளே



பைபாஸ் சர்ஜரி பண்ணணும்னு சொல்லியிருக்கார்.''

''பைபாஸ் சர்ஜரி பண்ணணுமா?''

பாக்யா தலையசைத்தாள்.

''அதுக்கு நிறைய செலவாகுமே? டாக்டர் யார்னு சொன்னே?''


''நந்தகுமார் ஸார்...''

''சிட்டியில இன்னிக்கு அவர்தான் லீடிங் கார்டியாலாஜிஸ்ட். அவர் சொன்னா சரியாத்தான் இருக்கும். ஆபரேஷனை என்னிக்கு பண்ணப் போறாராம்?''

''அடுத்த வாரத்துல ஏதாவது ஒரு நாள்.''

''ஆபரேஷனுக்கு நிறைய செலவாகுமே?''

''அதான் ஸார் உங்ககிட்டே வந்திருக்கேன். கம்பெனி மூலமா எனக்கு ஒரு பெரிய அமௌண்ட் கடனா வேணும் ஸார்...''



**18 ஆம் நூற்றாண்டில் புழக்கத்திலிருந்த மிக நீளமான துப்பாக்கி.**

# 8

ஹோட்டல் மொத்தமும் அமைதியில் ஆழ்ந்திருக்க, சுபாகர் எழுந்தான். மிருதுளாவைப் பார்த்துக் கொண்டே பாத்ரூமுக்குள் நுழைந்தான். அரையிருட்டில் மெல்ல நடந்து போய் - செதில் செதிலாய் கண்ணாடியால் ஆன ஜன்னல் அருகே நின்றான்.

ஒரு கண்ணாடிச் செதிலை சாக்ஸ் அணிந்த கைகளால்

மெல்ல பற்றி இழுத்துப் பார்க்க - அது சுலபமாய் மேல் நோக்கி வந்தது. ஒவ்வொரு கண்ணாடி செதிலையும் இழுத்துப் பார்த்தான். எல்லாமே சுலபமாய் அடம்பிடிக்காமல் வந்தது.

'போதும்! இது போதும்!'

'காரியத்தை முடித்துவிட்டு சுலபமாய் வெளியேறிவிடலாம்!'

பாத்ரூமை விட்டு உள்ளறைக்கு வந்து - மிருதுளாவை நோக்கி நடந்தான். சட்டென்று நிதானித்து - தன் சூட்கேஸ் அருகே குனிந்து - அதன் மூடியைத் திறந்து - உள்ளே கையை நுழைத்து மாத்திரை ஒன்றைத் தேடி எடுத்து - அதைக் கொஞ்சம் போல் தண்ணீர் விட்டு நசுக்கி - மாவு மாதிரி ஆட்காட்டி விரலில் பூசிக் கொண்டான். விரல் உலர்ந்துவிடும் முன்பாக - மிருதுளாவை நெருங்கி - அவளுடைய நாசிக்கு நேராகப் பிடித்தான். மூச்சுக்காற்று விரலில் பட்டு மருந்து வாசத்தை இழுக்க - மிருதுளாவின் தலை லேசாய் அசைந்தது. தொடர்ந்து நீளமான மயக்கம்.

''மிருதுளா...''

மெல்லக் கூப்பிட்டு உசுப்பிப் பார்த்தான்.

ஜடம் மாதிரி இருந்தாள்.

சுபாகர் பரபரவென்று செயல்பட்டான்.

மிருதுளாவின் உடம்பிலிருந்த சேலையை உருவி அறையின் மையத்திலிருந்த இரும்பு வளையத்தில் - ஸ்டூலில் ஏறிக் கட்டினான். பின் மிருதுளாவை கட்டிலினின்றும் இழுத்து வந்து - கழுத்தில் சேலையால் சுருக்கிட்டு முகத்தை நிமிர்த்தி பெருமூச்சுகளோடு ஸ்டூலின் மேல் ஏற்றி வளையத்தோடு சேர்த்துக் கட்டினான்.

மிருதுளாவின் கால்கள் இப்போது ஸ்டூலைத் தொட்டுக்கொண்டிருக்க - சுபாகர் அவளை அண்ணாந்து பார்த்தான்.

''நீ என்னை டைவோர்ஸ் பண்ணப் போறியா...



லைஃபிலிருந்து உனக்கு டைவோர்ஸ் வாங்கித்தர்றேன். போய்ச் சேர்...''

மிருதுளாவின் கால்களுக்குக் கீழே இருந்த ஸ்டூலை மெல்ல நகர்த்த - மெலிதான இருட்டில் அவளுடைய உடம்பு வெட்டிக் கொள்ள ஆரம்பித்தது.

சில விநாடிகள்தான்.

நிசப்தமாய்த் தொங்கினாள் மிருதுளா.

சுபாகர் வாட்ச்சைப் பார்த்தான்.

4.30

நகர்ந்து போய் - சூட்கேஸைக் கிளறி தன் ஜாக்கிங்சூட்டை எடுத்து அணிந்து - கான்வாஸ் ஷூவை மாட்டிக் கொண்டான். பாத்ரூமுக்குள் நுழைந்து - ஜன்னலின் கண்ணாடிச் செதில்களை - ஜாக்கிரதையாய் நகர்த்தி - ஓரமாய் வைத்துவிட்டு - அது காட்டிய செவ்வக துவாரத்திற்குள் நுழைந்து - மறுபக்க சன்ஷேடில் சத்தமில்லாமல் குதித்தான்.

நின்று -

ஒரு நிமிஷ நேரம் நிதானித்து -

சுற்றும் முற்றும் பார்த்தான். கொடைக்கானல் தீவிரமான பனியில் இருந்தது. இருட்டு அதனோடு இழைந்து போயிருக்க - எங்கும் நிசப்தம். மேல் மாடியறையில் யாரோ இருமும் சத்தம் மட்டும் விட்டுவிட்டுக் கேட்க - சுபாகர் பதட்டமில்லாமல் - அந்தக் கண்ணாடிச் செதில்களை எடுத்து - சுவரில் பொருத்தி ஜன்னலுக்கு பழைய வடிவம் கொடுத்தான்.

பிறகு சன்ஷேடில் நடந்து -

அதன் கோடிக்குப் போய் - சுவரைப் பற்றிக் கொண்டு மேலே எம்பி - அந்தரத்தில் சில விநாடி நேரம் ஊசலாடி - மாடி வராந்தாவில் குதித்தான். ஜாக்கிரதைத்தனமான குதிப்பு.

''ச்சப்ப்...''

கான்வாஸ் அணிந்த பாதங்கள் தரையில் பதிந்து நின்றன. வராந்தாவில் இயல்பாய் நடந்து ரிசப்ஷன்

அறைக்குள் நுழைந்தான். ரிசப்ஷன் அறை அரையிருட்டில் இருந்தது.

ரிசப்ஷனிஸ்ட் கிளார்க் ஒருவன் அந்நேரத்துக்கே எழுந்து - லெட்ஜர் ஒன்றைப் பிரித்து வைத்துக் கொண்டு கையிலிருந்த பில்லுகளோடு சரிபார்த்துக் கொண்டிருந்தான். கழுத்தில் கனமான மப்ளர்.

சுபாகரைப் பார்த்ததும் இரண்டு நாள் பழக்கத்தில் சிரித்தான்.

''குட்மார்னிங் ஸார்.''

''எங்கே ஸார் கிளம்பிட்டீங்க...? ஜாக்கிங்கா?''

''ம்...''

''இன்னிக்கு குளிர் ரொம்பவும் அதிகம்ன்னு வெதர் ரிப்போர்ட் சொல்லுது சார். ஸன்ரைசானதும் கிளம்பலாமே?''

''நோ நோ. இந்தக் குளிர்ல ஜாக்கிங் பண்றதே ஒரு சுகம்தான். சரியா ஒரு மணி நேரத்துல நான் திரும்பிடுவேன். ஆறு மணிக்கு காப்பி அனுப்பிச்சுடுங்க.''

''எஸ் ஸார்.''

சுபாகர் ஒரு போலியான உற்சாகத்தை உடம்பில் நிரப்பிக் கொண்டு ஹோட்டலின் போர்டிகோ படிகளில் குதித்துப் போனான். உதடுகளில் விசிலை வழியவிட்டான்.

ஆனால் - மனசுக்குள் -

'திடுக் திடுக்'கென்று இதயம் துடித்துக் கொண்டிருந்தது. 'போலீஸ் இதைக் கொலையென்று மோப்பம் பிடித்துவிடுவார்களா?' - மூளை ஓயாமல் சந்தேகம் கேட்டது.

'எப்படி பிடிக்க முடியும்...?'


'நிச்சயமாய் முடியாது. அறை உள் பக்கமாய் தாள் போடப்பட்டிருக்கிறது. நான் வெளியே ஜாக்கிங் புறப்பட்டுப் போனபோது மிருதுளா எழுந்து தாள் போட்டிருக்க வேண்டும் என்றுதான் போலீஸ் நினைப்பார்கள். அப்படித்தான் நினைக்க முடியும்.'



'அதுவுமில்லாமல்' -

'மிருதுளாவின் உடம்பில் உயிர் இருக்கும்போதே தூக்கில் தொங்க விட்டிருக்கிறேன். ஒரு தற்கொலைக்கு வேண்டிய சிம்ப்டம்ஸ்தான் மிருதுளாவிடமிருந்து போலீஸுக்குக் கிடைக்கும். போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டும் அதைத்தான் சொல்லும்' அவனுடைய உள்மனம் தைரியம் சொல்ல -

ஹோட்டலுக்கு வெளியே கொட்டியிருந்த இருட்டில் மெதுவாய் ஓட ஆரம்பித்தான் சுபாகர். ஜில்லென்ற பனியிலும் முகம் வியர்த்துப் போயிருந்தது.



**16 ஆம் நூற்றாண்டின் சங்கிலி (நெக்லஸ்). அன்னை மேரியும், குழந்தை ஏசுவும் டாலரில் பொறிக்கப்பட்டுள்ளது.**

## 9

ரகோத்தமராவ் புன்னகை பூத்தார்.

''என்ன பாக்யா கேட்டே...? கடனா...?''

''ஆமா... ஸார்... மாசாமாசம் எனக்கு தர்ற சாலரியில் பாதி அமௌண்டை டிடெக் பண்ணிக்கலாம் ஸார்.'' கண்களில் நீர் மின்ன சொன்னாள் பாக்யா.

அவர் மோவாயைத் தேய்த்துக் கொண்டே அவளிடம் கேட்டார். ''உன்னைப் பெண் பார்க்க வந்தாங்களே... அவங்க என்ன சொல்லிட்டு போனாங்க..?''

''நகை போடற விஷயத்துல கல்யாணப் பேச்சு நின்னுடுச்சு ஸார்... நான் மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை கொஞ்சம் கடுமையா பேசப்போக அம்மாவுக்கு அந்த அதிர்ச்சியைத் தாளமாட்டாமே ஹார்ட் அட்டாக்... வந்துடுச்சு...''

''ஸோ... இப்போ கல்யாணம் நின்னு போச்சு..?''

''ஆமா... ஸார்...''

''உங்கம்மாவுக்கு பைபாஸ் சர்ஜரி ஆபரேஷன் பண்ண எவ்வளவு செலவாகும்னு டாக்டர் சொன்னார்?''

''லட்சத்து அம்பதாயிரம் ரூபா வரைக்கும் செலவாகும்ன்னு சொன்னார்...''

''ஒகே... பாக்யா... அந்த லட்சத்து அம்பதாயிரத்தை நான் தர்றேன் - கடனா இல்லை; என்னோட அன்பளிப்பா...''

''ஸ... ஸார்...''

''நோ... நோ... அதுக்குள்ளே உணர்ச்சிவசப்பட்டு என் கால்ல விழுந்து நன்றி சொல்லிடாதே பாக்யா... நான் தரப்போகிற பணத்துக்கு பிரதியுபகாரமா நீ ஒண்ணு பண்ணனும்...''

''எ... என்ன ஸார்...?''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்...'' சொல்லிவிட்டு அவர் பொய்ப்பல் காட்டி சிரித்தார்.

''ஸ... ஸார்...''

''என்கிட்டேயிருந்து நீ இந்த வார்த்தையை எதிர்பார்த்திருக்க மாட்டே... இல்லையா... பாக்யா...?''

பாக்யா உறைந்து போய் நின்றிருந்தாள்.

அவர் தொடர்ந்தார்.

''எனக்கு வயசாச்சேன்னு பார்க்கிறியா...? உடம்புக்குத்தான் இந்த வயசு. மனசுக்கு கிடையாது. என்னோட மொதல் மனைவி இறந்தப்போ எனக்கு வயசு நாற்பது. ரெண்டாவது மனைவி இறந்தப்போ ஐம்பத்தி ரெண்டு... உன்னை ஆபீஸ்ல பார்க்கும் போதெல்லாம் என்னோட மூணாவது கல்யாணத்தைப் பத்தி யோசனை



எழும்... உன்கிட்டே இதைப்பத்தி பேச எனக்கு தயக்கமாயிருந்தது...''

பாக்யா பேசத் திணறினாள்.

''ச... சார்... நா... நான்...''

''ஒண்ணும் அவசரமில்லை... பாக்யா... நல்லா யோசனைபண்ணு... இது உன்னோட கல்யாண விஷயம்... நா ஒண்ணும் உன்னைக் கட்டாயப்படுத்தலை... உனக்குப் பிரியமிருந்தா எனக்கு கழுத்தை நீட்டலாம்...''

கண்களில் அவசர அவசரமாய் நீர் கோர்த்தாள் பாக்யா.


''சார்... நீங்க இப்படி சொல்லுவீங்கன்னு...''

''நீ கொஞ்சமும் எதிர்பார்க்கலை... அப்படித்தானே சொல்லப்போறே? எதிர்பாராத சம்பவங்கள் நடக்கிறதுதான் வாழ்க்கை... நான் இன்னிக்கே வேணும்னாலும் உங்கம்மாவோட ஆபரேஷனுக்குத் தேவையான பணத்தைத் தர்றேன்... ஆனா அடுத்த வாரமே நம்ம கல்யாணம் நடக்கணும்... என்ன சொல்றே...?''

பாக்யா எதுவும் பேசத் தோன்றாமல் -

அவரையே பார்த்தாள்.

---



**கி.பி.1586ல் பயன்படுத்தப்பட்ட ஜெர்மனியின் மேஜைக் கடிகாரம்** (Table Clock).

---

## 10

சுபாகர் ஜாக்கிங் முடித்துக் கொண்டு - லாட்ஜை

நெருங்கியபோது நேரம் 6.05. கொடைக்கானல் புலரும் தறுவாயில் இருந்தது. யூகலிப்டஸ் மரங்களுக்குப் பின்னால் - வானம் பிளேடால் கீறின மாதிரி இருந்தது. பட்சி வர்க்கங்கள் அலகுகளைத் திறக்க ஆரம்பித்திருந்தன.

ஹோட்டல் ரிசப்ஷனில் சொற்ப கூட்டம் தெரிய, லாபியில் நுழைந்த சுபாகர் ரிசப்ஷனிஷ்ட் கிளார்க்கைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''ரூமுக்கு காப்பி அனுப்பிட்டீங்களா...?''

''நீங்க ரூமுக்கு போங்க சார், அஞ்சு நிமிஷத்துல அனுப்பிச்சு வெச்சுடறேன்... சாரி ஃபார் த டிலே...''

''சீக்கிரம் சார். என்னோட ஒய்ப்புக்கு மார்னிங் அவர்ஸ்ல ஆறு மணிக்குள்ளே காப்பி குடிச்சாகணும். இல்லேன்னா தலைவலி வந்துடும்...''

''உங்க பின்னாடியே காப்பியை அனுப்பிச்சுடறேன் சார்...''

''தேங்க்யூ.''

சுபாகர் விசிலடித்துக் கொண்டே தன்னுடைய அறையை நோக்கிப் போனான். மனசுக்குள் பயம் உதைத்துக் கொள்ள கதவைத் தட்டினான்.

''டொக்... டொக்...''

கூடவே காலிங் பெல்லையும் அழுத்தினான்.

''ர்ர்ர்ர்ர்ர்.''

''டொக்... டொக்...''

''மிருதுளா... மிருதுளா'' வேண்டுமென்றே குரலை எக்கிக் கூப்பிட்டான் சுபாகர். மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்தாக வேண்டுமே!

''டொக்... டொக்...'' கதவின் மேல் பலமான தட்டு.

''ர்ர்ர்ர்'' காலிங்பெல்லின் தலையின் மேல் ஆவேசமான அழுத்து.

''மிருதுளா... மிருதுளா...'' தொண்டையினின்றும் பீறிடும் குரல்.

''என்ன சார்... அம்மா அசந்து தூங்கறாங்களா..?''



லாட்ஜ் பையன் காப்பி டம்ளர்கள் ஏந்திய ட்ரேயோடு வந்தான்.

''கத்தி கத்தி தொண்டையே போச்சு... நீயும் கொஞ்சம் தட்டு...''

பையன் தட்டினான்.

''அம்மா... அம்மா...''

மறுபடியும் காலிங்பெல்லின் அலறல் சத்தம்.

''என்ன சார் இது... அம்மா பாத்ரூம்ல போய் உட்கார்ந்துட்டாங்களா...?''

''அப்படியிருந்தாலும் சத்தம் கேட்குமே...'' சொன்ன சுபாகர் தன் குரலின் மொத்த பலத்தையும் திரட்டிக் கொண்டு கத்தினான்.

''மிருதுளா... மிருதுளா...''

ரிசப்ஷனில் இருந்தவர்கள் - ஒவ்வொருவராய் நடந்து வந்து - சுபாகரை எட்டிப் பார்த்தார்கள். கிளார்க் ஓடி வந்தார்.

''என்ன சார் ப்ராப்ளம்...?''

''பதினைந்து நிமிஷமா கதவு தட்டறோம்... உள்ளேயிருந்து எந்த விதமான சத்தமும் வரலை சார்... என்னோட ஒய்ப் அசந்து தூங்கற ரகமில்லை சார்...''

''குளிச்சிட்டிருப்பாங்களோ...?''

''இவ்வளவு நேரமாவா...?''

''ஒரு ஸ்டூல் போட்டு, வெண்டிலேட்டர் வழியா ஏறிப் பார்க்கறீங்களா சார்...?'' கிளார்க் சொல்ல தலையாட்டினான் சுபாகர்.

காப்பிப் பையன் ஓடிப் போய் - ஸ்டூலைக் கொண்டு வந்து சுவரோரமாய் போட - சுபாகர் ஸ்டூலின் மேல் ஏறி வெண்டிலேட்டரின் கம்பிகளைப் பற்றிக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தான்.

தொங்க விட்ட நிலையிலேயே - இன்னமும் மிருதுளா லேசாய் லேசாய் ஊசலாடிக் கொண்டிருக்க சுபாகர் -


தன் முகத்திற்கு ஒரு தற்காலிக அதிர்ச்சியைக் கொண்டு வந்து -

''மிருதுளா...''

என்று வீறிட்டு - ஸ்டூலினின்றும் சாய்ந்தான்!

அவசர அவசரமாய் -

அங்கே ஒரு பதட்ட நிலை உருவாக ஆரம்பித்தது. ஹோட்டல் கிளார்க் அதே ஸ்டூலில் ஏறி உள்ளே பார்த்துவிட்டு போலீஸுக்கு போன் செய்ய டெலிபோனை நோக்கி ஓடினார்.



**6 ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் பயன்படுத்தப்பட்ட சிறிய கப்பல் (சுட்ட மண்ணால் செய்யப்பட்ட மாதிரி).**

## 11

ஹாஸ்பிட்டல்.

மயக்கமாய் கிடக்கும் கோகிலாம்பாளையே - கண்களில் நீர் மின்ன - பார்த்து கொண்டிருந்த பாக்யா தனக்குப் பின்னால் எழுந்த காலடி சத்தம் கேட்டு திரும்பினாள்.

அந்த இளைஞன் கதவோரமாய் நின்றிருந்தான். களையான முகம்.

''எக்ஸ்க்யூஸ்மீ... நான் உள்ளே வரலாமா...?''

பாக்யா கட்டிலினின்றும் எழுந்து குழப்பமாக



அவனைப் பார்த்தாள். பார்வையிலேயே ''யார் நீங்க?'' என்று கேட்டாள்.

''எம்பேர் திவாகர்... ரகோத்தமராவுக்கு... பர்சனல் அஸிஸ்டெண்ட். நான் வேலைக்கு சேர்ந்து பத்து நாள் தான் ஆகுது...''

''ஓ... நீங்கதானா அது... ஆபீஸ்ல பேசிக்கிட்டாங்க... உள்ளே வாங்க...'' கண்களில் இருந்த கண்ணீரை புடவைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டே அவனை வரவேற்றாள். நாற்காலியை இழுத்துப் போட்டாள்.

அவன் - திவாகர் - உள்ளே வந்தான்.

''உங்க மதர்க்கு இப்போ எப்படியிருக்கு...?''

''கொண்டு வந்து சேர்த்ததிலிருந்து மயக்கமாகவே இருக்காங்க. ஒரு இம்ப்ரூவ்மெண்ட்டும் இல்லை.'' கண்களில் நீர் மறுபடியும் குபுக்கென்று, மின்னியது.

திவாகர் கட்டிலை நெருங்கி கோகிலாம்பாளை ஒரு நிமிஷம் பார்த்துவிட்டு பாக்யாவை நெருங்கிக் கேட்டான். ''உங்க மதர்க்கு பைப்பாஸ் சர்ஜரி அவசியம்ன்னு டாக்டர் சொல்லியிருக்காரா...?''

அவள் வியப்போடு அவனைப் பார்த்தாள்; அவன் தொடர்ந்தான்.

''எனக்கு எல்லாமே தெரியும்... மிஸ் பாக்யா... நீங்களும் எம்.டி.யும் பேசிட்டிருந்ததை நான் கேட்டேன். உங்க மதர் உயிர் பிழைச்சு நடமாடணும்ன்னா நீங்க உங்க வாழ்க்கையை அவர்கிட்டே பணயம் வெக்கணும். அப்படி தானே...?''

பாக்யா தலையசைத்தாள். திவாகர் கேட்டான்.

''இந்த விஷயத்துல நான் உங்களுக்கு உதவலாமா?''

''ம்...''

''எம்.டி.க்கு நான் பி.ஏ.ன்னு மட்டும் நினைச்சுடாதீங்க... அவரோட ரெண்டாவது மனைவியா இருந்து ஒரு வருஷத்துக்கு முன்னாடி செத்துப் போன பத்மாவதியோட தம்பி நான். ஸோ... எம்.டி.யைப் பத்தி

உங்களுக்குத் தெரிஞ்சதைக் காட்டிலும் எனக்குக் கொஞ்சம் அதிகமாவே தெரியும்... இதுவரைக்கும் வெளியே யார்க்கும் தெரியாத ஒரு உண்மையை உங்ககிட்டே மட்டும் சொல்லப் போறேன்... எம்.டி.யும் ஒரு ஹார்ட் பேஷண்ட்தான். ரெண்டு வால்வு பழுதான நிலைமையில இருக்கு... ஃபேமிலி டாக்டர் ராஜசேகர் ஆபரேஷனை பண்ண முடியாதுன்னு சொல்லிட்டார்... காரணம் எம்.டி.க்கு சுகர் இருக்கு... டாக்டர் ராஜசேகர் என்கிட்ட தனிப்பட்ட முறையில் சொன்ன வாசகம் இதுதான். ரகோத்தமராவ் ஒரு ஆறு மாசம் உயிரோடு இருக்கலாம்... அதுக்கு மேலே சாத்தியம் கிடையாது.''

பாக்யா திக்கென்று நிமிர்ந்தாள்.

''எம்.டி..ஆறு மாசந்தான் உயிரோடு இருப்பாரா...?''

''எஸ்... எம்.டி.க்கே தெரியாத ஒரு உண்மை இது. அந்த மனுஷன் சாக வேண்டியவர்தான். அவர்க்கு வாழ்க்கைப் பட்ட ரெண்டு மனைவிகளுமே ஏன் ரொம்ப நாள் வாழாமே செத்துப் போனாங்கன்னு உங்களுக்குத் தெரியுமா மிஸ் பாக்யா...?''

''தெரி... யாது...''

''எம்.டி. ரகோத்தமராவ் ஒரு ஸேடிஸ்ட்... பெண்களை இம்சைப்படுத்தி அவங்க படற கஷ்டத்தைப் பார்க்கிறதுல அவர்க்கு ஒரு இன்பம். என்னோட அக்கா பத்மாவதியை உடம்புல துணியில்லாமே நிக்க வெச்சு, சிகரெட்டாலே சூடு போட்ட புண்ணியவான். என்னோட அக்கா எனக்கு எழுதின லெட்டர்செல்லாம் வெச்சிருக்கேன். அந்த ஆள் பண்ணின கொடுமையை எல்லாம் அவ பக்கம் பக்கமா விவரிச்சு எழுதியிருக்கா...''

கண்களை அகல விரித்தபடி -

அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் பாக்யா. அவன் சொன்னான். ''அவர்கிட்டே எந்தப் பெண்ணுமே மனைவியா கொஞ்ச நாள்தான் காலம் தள்ள முடியும்...



இப்போ உங்களுக்கு வலை விரிச்சிருக்கான்... நீங்க இந்த வலையில் மாட்டாமே தப்பணும்ன்னா நான் சொல்றபடி நீங்க கேட்கணும்...''

''சொ... சொல்லுங்க...''

''அவனைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதம்ன்னு சொல்லிடுங்க... கல்யாணம், அம்மாவுக்கு ஆபரேஷன் நடந்து நல்லபடியா ஆன பின்னாடிதான்னு ஒரு கண்டிஷனைப் போடுங்க... அந்தக் கிழவன் அதுக்கு நிச்சயமா ஒத்துக்குவான்...''

''ஒத்துக்கலைன்னா..?''

''நிச்சயமா ஒத்துக்குவான்... உங்க மதரோட ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சதும்... மத்த விஷயங்களை பேசிக்குவோம்...''

''எனக்கு பயமாயிருக்குங்க... அந்த ஆள் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி கட்டாயப்படுத்தினா...?''

''கட்டாயப்படுத்தமாட்டான்...''

''எப்படி சொல்றீங்க...?''

''எனக்குக் கொஞ்சம் ஜோஸ்யம் தெரியும்... மிஸ் பாக்யா! இன்னும் ஒரு அரைமணி நேரம் கழித்து அந்த ஆளுக்கு நீங்க போன் பண்ணுங்க. நான்தான் ரிஸிவரை எடுப்பேன். நீங்க பேசறதா சொல்லி கனெக்ஷன் குடுப்பேன்... நீங்க அந்த ஆளைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதம்ன்னு சொல்லி - ஆபரேஷனை உடனடியா நடத்தச் சொல்லுங்க...''

பாக்யா குழப்பமாய்த் தலையாட்டினாள்.

''நீங்க கொஞ்சம் துணிச்சலான பொண்ணுன்னு கேள்விப்பட்டேன்... இந்த விவகாரத்தை நீங்க மனம் தளராமே ஹேண்டில் பண்ணணும்... பக்கத்துணைக்கு நானும் இருக்கேன்...''

''தேங்க்யூ...''



13 ஆம் நூற்றாண்டில் கடலில் பயன்படுத்தப்பட்ட எகிப்து நாட்டு படகின் மாதிரி.

## 12

கொடைக்கானலின் அந்த விடியற்காலை நேரத்தில் - லாட்ஜ் பதட்டமாய் இருந்தது. போலீஸ் ஜீப் ஒன்று போர்டிகோவில் புதைந்து போயிருக்க - காக்கி யூனிஃபார்ம்கள் பரவலாய் தெரிந்தது. ஹோட்டல் ரிசப்ஷனிஷ்ட் இளைஞன் முகத்தில் பேஸ்த் அடித்திருந்தான். ரூம் கேட்டு வந்தவர்கள் அங்கே நடக்கிற களேபரத்தைப் பார்த்ததும் சொல்லாமல் கொள்ளாமல் - வேறு லாட்ஜ்களை நோக்கி நடந்தார்கள்.

அறையில் -

மிருதுளா கீழே இறக்கப்பட்டு - நெடு கிடத்தப்பட்டிருந்தாள்.

அருகே -

தலையில் கைவைத்து அதிகபட்ச சோகத்தை முகத்துக்குக் கொடுத்து - மடங்கிப் போய் உட்கார்ந்திருந்தான் சுபாகர். பக்கத்தில் அந்



இன்ஸ்பெக்டர்.

''நீங்க வெளியே ஜாக்கிங் புறப்பட்டுப் போனபோது மணி எவ்வளவு இருக்கும்?''

''நாலரை...''

''நீங்க வெளியே போகும்போது கதவை தாழ்ப்பாள் போட்டுக்கச் சொன்னீங்களா...?''

''ஆமா...''

''நீங்க ஜாக்கிங் முடிஞ்சு வரும்போது மணி எவ்வளவு...?''

''ஆறு மணி இருக்கும் ஸார்...''

''நீங்க கொடைக்கானலுக்கு வந்து மூணு நாளாச்சுன்னு சொன்னீங்க... வந்ததிலிருந்து உங்களுக்கும் உங்க மனைவிக்கும் ஏதாவது சண்டையா...?''

சுபாகர் வேண்டுமென்றே தயக்கம் காட்டினான்.

''சொல்லுங்க மிஸ்டர் சுபாகர்...''

''மிஸ்டர் இன்ஸ்பெக்டர்... உங்ககிட்டே கொஞ்சம் தனியாப் பேசணும்... பேப்பர்ல நியூஸ் வராமே பார்த்துக்கணும்...''

''அப்படி வாங்க...'' ஹாலின் ஓரமாய் கூட்டிக் கொண்டு போனார். சுவர்க்கு கையை முட்டுக் கொடுத்தபடி 'சொல்லுங்க' என்றார்.

''இன்ஸ்பெக்டர்... எனக்கும் மிருதுளாவுக்கும் கல்யாணமாகி இன்னும் அஞ்சுநாள் கூட ஆகலை... கல்யாணம் முடிஞ்ச அன்னிக்கே சாந்தி முகூர்த்தம் வெச்சாங்க... மிருதுளாவை நான் நெருங்கியபோது... அவளுக்கு 'செக்ஸ் அலர்ஜி' இருக்குங்கிறதை புரிஞ்சுகிட்டேன். என் கை அவ மேலே பட்ட போதெல்லாம் அவ எம்மேல சீறிவிழுந்தா... எங்கேயாவது வெளியூர் போய் ஹனிமூனை வெச்சுக்கலாம்ன்னுதான் அவளைக் கொடைக்கானலுக்கு கூட்டிட்டு வந்தேன். ஒரு கணவனுக்கும் - மனைவிக்கும் மத்தியில

'செக்ஸ்'ங்கிறது ஒரு அருவருப்பான விஷயமில்லைன்னு
- சொல்லிப்பார்த்தேன். ஆனா அவ கேக்கிற மாதிரி
தெரியலை. ஒவ்வொரு ராத்திரியும் நான் அவளைத்
தொட முயற்சிக்கும் போதெல்லாம் கத்தி ரகளை
பண்ணுவா... 'நீங்க என்னைத் தொட்டா... நான் தூக்குல
தொங்கிடுவேன்'னு பயமுறுத்தினா... அந்த சமயத்துல
அவ சொன்னதை நான் அலட்சியமா
எடுத்துக்கிட்டேன்... ஆனா இன்னிக்கு அவ
நிஜமாவே... தூக்குல தொங்கிட்டா ஸார்...''

சுபாகர் அழ நிரம்பவும் சிரமப்பட்டான்.

''உங்க ஒய்ஃப் படிச்சவங்க தானே...?''

''ஆமா ஸார்...''

''ஒரு படிச்ச பொண்ணு... செக்ஸை ஏன் அருவருப்பா
நினைக்கணும்...?''

''அதான் தெரியலை;...''

''உங்க கல்யாணம் காதல் கல்யாணமா...?''

''இல்ல ஸார். வீட்ல பார்த்து பண்ணின கல்யாணம்.
ஜட்ஜ் சக்கரவர்த்தியோட ஒரே டாட்டர்... கல்யாணம்
பண்ணிக்கவே மாட்டேன்னு சொல்லிட்டிருந்த
பொண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணி
வெச்சுட்டாங்க...''

''வீட்டுக்கு தகவல் கொடுத்திட்டீங்களா...?''

''கொடுத்தாச்சு ஸார்...''

இன்ஸ்பெக்டர் கீழே கிடத்தப்பட்டிருந்த
மிருதுளாவிடம் வந்தார். சேலை கழுத்தை இறுக்கியதில்
நாக்கு லேசாய் வெளித்தள்ளியிருந்தது. வலது கண்ணில்
பிதுக்கம் தெரிந்தது. கடை வாயோரம் நுரை எச்சிலும்
கொஞ்சமாய் ரத்தமும் உறைந்து போயிருந்தது.

அவளருகே உட்கார்ந்து பார்வையால் புரட்டி
பார்த்துக் கொண்டிருந்த சப்-இன்ஸ்பெக்டர்
இன்ஸ்பெக்டரை பார்த்ததும் எழுந்தார். இன்ஸ்பெக்
கேட்டார்.

''என்ன மகேஸ்வரன்...? பாடி என்ன சொல்லுது...?''



''மே... பி சூஸைடு ஸார்...''

''எப்படி சொல்றீங்க...?''

''உடம்புல பலாத்காரம் ஏதும் தெரியலை ஸார். உடம்புல ஒரு நகக்கீறல்கூட இல்லை... மர்டரா இருந்தா வாயில சலைவா செக்ரீஷியன் இருந்திருக்காது...''


''ரூம்ல வித்தியாசமா ஏதாவது கிடைச்சதா...?''

''நத்திங் ஸார்...''

''பாடியை போஸ்மார்ட்டம் அனுப்பி... ரிப்போர்ட்டை உடனடியாக வாங்குங்க மகேஸ்வரன்... மர்டரா... சூஸைடான்னு தெரிஞ்ச பின்னாடிதான் கேஸை நகர்த்த முடியும்...''

''எஸ்... ஸார்...''

மிருதுளா போஸ்ட்மார்ட்டம் போகத் தாயாரானாள்.



**15 ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியின் போர்க் கருவியாக பயன்படுத்தப்பட்ட கோடரி.**

# 13

ரகோத்தமராவ் இருந்த அறைக்குள் மெதுவாய் நுழைந்தாள் பாக்யா. அது அவருடைய பிரத்யேக அறை. அவர் மட்டுமே தனித்து இருக்கக்கூடிய ஜில்லிப்பான ஏ.ஸி.அறை.

பாக்யா உள்ளே நுழைந்த விநாடி ரகோத்தமராவ் தான் பார்த்துக் கொண்டிருந்த ஒரு அப்பட்டமான ஆங்கிலப்படத்தை அணைத்தார்.

''வா... பாக்யா...''

''வணக்கம் ஸார்...''

''இன்னும் ஒரு வாரம் - பத்து நாள்ல எனக்கு ஒய்ஃபா வரப்போற... இந்த வணக்கமெல்லாம் எதுக்கு...?''

அவள் பேசாமல் இருந்தாள். அவர் தொடர்ந்து சொன்னார்.

''நீ போன் பண்ணி விஷயத்தைச் சொன்னதும் என்னாலே நம்ப முடியலை... நிஜமாவே நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கிறீயா...?''

''என்னோட அம்மாவுக்காக...''

''நல்ல பாலிஸி... நான் உன்னை இப்போ எதுக்காக கூப்பிட்டேன் தெரியுமா... பாக்யா...?''

தெரியாது என்பது போல் தலையாட்டினாள் பாக்யா.

ரகோத்தமராவ் தன் அருகேயிருந்த மேஜை டிராயரின் இழுப்பைத் திறந்து ஒரு செக் புக்கை எடுத்தார். அதில் ஃபில்லப் செய்திருந்த ஒரு தாளைக் கிழித்து அவள் முன்னால் நீட்டினார்.

''ஆபரேஷன் பண்ண முதல் தவணையாக லட்சத்து அம்பதாயிரம் ரூபாய்க்கு செக் எழுதியிருக்கேன். பணம் இன்னும் வேண்டியிருந்தா... எனக்குத் தகவல் கொடு...''

''தேங்க்யூ... சார்...''

செக்கை வாங்கிக் கொண்டாள். நகர முயன்றவளை நிறுத்தினார்.

''ஒரு நிமிஷம்...''

நின்றாள்.

''உன்னோட அம்மாவுக்கு பைபாஸ் சர்ஜரி ஆபரேஷன் முடிஞ்சு... உடம்பு குணமானதும்... நீ இந்த கல்யாணத்துக்கு மாட்டேன்னு சொல்ல மாட்டியே...?''

''அந்த மாதிரியான நன்றி கொன்ற புத்தி எனக்கு இடையாது சார்... நீங்க செஞ்ச உதவிக்கு...'' அவள் மேற்கொண்டு பேசும் முன்பு அறைக்கதவு தட்டப்பட்டது.

மெலிதாக - இம்சைப் படுத்தாத தட்டல்.

''தட்... தட்...''



''எஸ்...'' ரகோத்தமராவ் குரல் கொடுக்க - கதவைத் திறந்து கொண்டு திவாகர் எட்டிப் பார்த்தான். உடம்புக்கு பவ்யத்தைக் கொடுத்து உள்ளே நுழைந்தான். ''சாரி... ஃபார் த டிஸ்டபன்ஸ்...''

''என்ன திவாகர்...?''

''நீங்க இஞ்செக்ஷன் எடுத்துக்க வேண்டிய டைம் சார்... இண்ட்டர்காம் ஒர்க் பண்ணலை... அதான் சொல்லிட்டு போக வந்தேன்...''

ரகோத்தமராவ் பாக்யாவிடம் திரும்பினார். ''நீ போ... பாக்யா. செக் பத்திரம்... உங்கம்மாவுக்கு ஆபரேஷன் முடிஞ்சதும் எனக்குத் தகவல் கொடு... நான் வந்து பார்க்கிறேன்... ஆபீசுக்கு லீவு போட்டுடு...''

தலையாட்டிக் கொண்டே நகர்ந்தாள் பாக்யா. திவாகர் ரகோத்தமராவுக்கு அருகே போய் நின்றான்.

''மெடிசன்ஸ் எடுத்து வைக்கட்டுமா சார்...?''

''ம்...''

திவாகர் அருகே இருந்த ஸ்டீல் அலமாரியைத் திறந்து ஊசி ஸிரிஞ்சையும் இன்சுலின் ஆம்பியூல் பாட்டிலையும் எடுத்து வைத்தான்.

ரகோத்தமராவ் தனக்குத்தானே ஊசி போட்டுக் கொள்ளும் ஆயத்தங்களில் இருந்தபோது திவாகர் கேட்டான்.

''சார்... எனக்கு ரெண்டு நாள் லீவு வேண்டும்...''

''எதுக்கு...?''

''மதுரையில் ஒரு ஃப்ரண்டோட மேரேஜ்...''

அவர் கோபமாய் நிமிர்ந்தார். ''கல்யாணம் கருமாதி இதுக்கெல்லாம் லீவு எடுக்கக் கூடாதுன்னு சொல்லித்தானே உன்னை வேலைக்கு எடுத்துக்கிட்டேன்... நீ என்னோட சொந்தக்காரன்ங்கிற உரிமையெல்லாம் காட்டி லீவு கேட்கக்கூடாது...'' லாயர்கிட்டே போனியா...?''

''சாயந்தரம் போவேன் சார்...''

''அந்த சுபாகர் கேஸைப்பத்தி என்ன சொல்றார்...?''

''கேஸை ஒரே ஆர்க்யூமெண்ட்ல அடிச்சுடலாம்ன்னு சொல்லியிருக்கார் சார்... பீஸ் கேட்டார். குடுத்துட்டு வந்தேன்...''

''இது மாதிரியான உபயோககரமான வேலையையெல்லாம் பார்க்காமே... கல்யாணத்துக்கு போகணும் - கருமாதிக்குப் போகணும்னு லீவு கேட்கறியே...?''

''சாரி சார்...''

அவனுடைய 'சாரி'யைப் பொருட்படுத்தாமல் தன் புஜத்தில் தானே இன்சுலின் இஞ்செக்ஷனை ஏற்றிக் கொண்டார் ரகோத்தமராவ்.



14 ஆம் நூற்றாண்டில் வட ஐரோப்பியக் கண்டத்தில் பயன்படுத்தப்பட்ட சாவி.

## 14

போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் ஸ்டேஷனின் மேஜை மேல் மல்லாந்து கிடக்க - அந்த இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும் எதிரெதிரே உட்கார்ந்திருந்தார்கள்.

''ரிப்போர்ட் க்ரிஸ்ட்ல் க்ளியரா இருக்கு ஸார்... இது ப்யூர்லி ஸுஸைடல் கேஸ். கேஸை சுலபமா டிஸ்போஸ் பண்ணிட்லாம்.''

''ரூம் உள்புறமா பூட்டியிருந்திருக்கு. இந்த கேஸ்ல வெளியாள் யாரும் உள்ளே போக வாய்ப்பில்லை... மிஸ்டர் சுபாகர் நாலரை மணிக்கு வெளியே ஜாக்கி



போனதும், மிருதுளா இந்த தற்கொலையை மேற் கொண்டிருக்கணும்...''

''தற்கொலைக்கான காரணம் எனக்கென்னமோ சரியா படலை ஸார். ஒரு கணவனிடம் செக்ஸ் தொடலுக்காக பயந்துகிட்டு மனைவி தற்கொலை பண்ணிக்குவாளா...? தற்கொலை பண்ணிக்கிட்டதுக்கான மோட்டிவ் சரியில்லை... காரணம் வேற என்னமோ இருக்கு...''

இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார். ''நோ... யூ... ஆர் ராங் மிஸ்டர் மகேஸ்வரன். ஒரு சில பெண்களுக்கு இந்த செக்ஸ் அலர்ஜி மேனியா இருக்கும். வெளியே இருந்து பார்க்கிறவங்களுக்கு இந்த விஷயம் சாதாரணமா தெரியலாம்... ஆனா இந்த அலர்ஜி அடிப்படையில் நிறைய தற்கொலைகள் அமெரிக்காவில நடந்திட்டிருக்கு... மிருதுளாவோட ஹஸ்பெண்ட் டாக்டர் சுபாகர் சொன்ன காரணத்துக்கு ஏற்ற மாதிரியே கன்பர்ம் ஆயிருக்கு... இதிலிருந்து மிருதுளா கணவனை நெருங்கவிடலைன்னு தெரியுதே...''

''பொண்ணோட அப்பா மிஸ்டர் சக்கரவர்த்தி இந்த மரணத்தைக் குறித்து லேசா சந்தேகப்படறார் ஸார்...!''

''என்ன சந்தேகம்...?''

''மிருதுளா தற்கொலை பண்ணிக் கொள்ளக் கூடிய அளவுக்கு கோழையான பொண்ணு கிடையாது. பேப்பர்ல வருகிற தற்கொலைக் கேஸ்களைப் பத்தி படிக்கிறபோது திட்டுவா. அவளுடைய இறப்புக்கு பின்னாடி வேற ஏதோ காரணம் இருக்குன்னு சொல்றார்.''

''என்ன காரணமா இருக்க முடியும்ன்னு அவர்கிட்டயே கேட்டுட வேண்டியதுதானே?''

''கேட்டேன் ஸார்... அவராலே அதுக்கு ஆன்ஸர் பண்ண முடியலே. திரும்பத் திரும்ப தான் சொன்னதையே சொல்லிக்கிட்டு அழுதார்.''

''தன் பெண்ணை யாரோ கொலை பண்ணிட்டதா சொல்றாரா?''

''அப்படியும் சொல்லலை...''

''இந்த கேஸ்ல எந்தக் குழப்பமும் கிடையாது மகேஸ்வரன். இது ஒரு ஈஸியான தற்கொலை கேஸ். மிருதுளா செக்ஸ் அலர்ஜியினாலே மனநலம் பாதிக்கப்பட்டிருக்கலாம். கல்யாணமான ஹஸ்பெண்ட் தன் உடம்பைத் தொட நேர்ந்தபோதுதான் - விஷயம் விஸ்வரூபம் எடுத்திருக்கு... கணவன் வெளியே போன சமயம் தூக்கு மாட்டிக்கிட்டு செத்துப் போயிருக்கா. போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டும் அது 'கன்னித்தன்மை' கெடலைன்னு தீர்க்கமா சொல்லுது...''

''ஹஸ்பெண்ட் சுபாகர் மேலே உங்களுக்கு சந்தேகம் வரலையா ஸார்?''

''இன் வாட் வே...?''

''சுபாகரோட கண்ணீரும் - துடிப்பும் கொஞ்சம் செயற்கையா தெரியுது. தன்னோட மனைவி மரணத்துக்காக அவர் துடிக்கிற துடிப்பு அவ்வளவு இயல்பா இல்லை...''

''அவர் ஒரு டாக்டர்... பிறப்பும், இறப்பும் அவருக்கு சாதாரணமா இருந்திருக்கலாம். தன்னோட புது மனைவிக்கு செக்ஸ் அலர்ஜி இருக்குங்கிற விஷயமே அவர்க்கு அதிர்ச்சியாய் இருந்திருக்கும்...''

''ஸோ... இது சூஸைட் கேஸ்...?''

''சென் பர்சன்ட்...''

''கேஸைக் கிளறிப் பார்க்க வேண்டாமா சார்?''

''வேண்டாம்... போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் நமக்கு சாதகமா இருக்கு. க்ளோஸிங் ஃபைல்ல இதையே காரணம் காட்டி - சேர்த்துடலாம்...''

இன்ஸ்பெக்டர் சொன்ன அதே விநாடி -

வாசலில் வந்து நின்ற டாக்ஸியிலிருந்து -

சுபாகர் இறங்கி ஸ்டேஷனுக்குள் வந்தான். இரண்டு நாளில் அவனுடைய தாடைப் ப்ரதேசம் அடர்த்தியான கருமையை வாங்கியிருந்தது. இரண்டு கண்களிலும் சிவப்பு உறைந்து போயிருந்தது.



''வாங்க... டாக்டர்...''

அவர்கள் காட்டின இருக்கையில் உட்கார்ந்தான் சுபாகர். உடைந்து போன குரலில் கேட்டான். ''நான் இன்னிக்காவது கொடைக்கானலை விட்டு மெட்ராஸ் போகலாமா... சார்?''

''தாராளமா போலாம்...''

''மிருதுளாவோட மரணம் என்மேலே உங்களுக்கு சந்தேகத்தை உண்டாக்கியிருந்தா தாராளமா என்னை விசாரிக்கலாம் சார்...''

''கேஸை ஒரு முடிவுக்கு கொண்டு வந்துட்டோம் டாக்டர்... உங்க ஒய்ப் தற்கொலை பண்ணிகிட்டு இறந்து போனதா பி.எம். ரிப்போர்ட் திட்டவட்டமா சொல்லுது.''

சுபாகர் மனசுக்குள் மலர்ந்தான். இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார். ''சம்பிரதாயமான சில பேப்பர்ஸ்ல உங்க கையெழுத்து மட்டும் வேணும்... போட்டுட்டு நீங்க கிளம்பலாம்.''

''தேங்க்யூ சார்...''

''உங்க மாமனார் மெட்ராஸ் போயிட்டாரா?''


''ம்... போய்ட்டார்.''

''அவருக்கு உங்க மேல ஏதோ மனத்தாங்கல். மகளோட தற்கொலை சாவில் அவர் சந்தேகப்படறார்.''

சுபாகர் கசப்பாய் சிரித்தான்.

''பெண்ணைப் பெத்த எல்லா அப்பாக்களுக்கும் வர்ற நியாயமான சந்தேகம்தான் சார் இது. அதைப் பத்தி நான் கவலைப்படப் போறதில்லை... நான் எந்தெந்த பேப்பர்ல கையெழுத்துப் போடணும்ன்னு சொன்னா. போட்டுட்டு உடனடியா இந்த ஊரை விட்டுக் கிளம்பறேன் சார்.''

சட்டையிலிருந்து பேனாவை உருவிக் கொண்டான் சுபாகர்.



2000 ஆண்டுகளுக்கு முன்பு முட்டைகளைப் பாதுகாக்க பயன்படுத்தப்பட்ட கப் (Egg Cup). கோழி முட்டை அன்றைய மக்களின் தினசரி உணவாக இருந்திருக்கிறது.

## 15

''முடிவா என்னதான் சொல்றீங்க லாயர் சார்?'' சுபாகர் கேட்டதும் எதிரில் உட்கார்ந்து கட்டைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்த லாயர் நிமிர்ந்தார்.

''உங்க பெரியப்பாவோடு காம்ப்ரமைஸ் பண்ணிக்கிறதுதான் பெட்டர். கேஸ் கோர்ட்டுக்கு போனா நிக்கும்னு எனக்குத் தோணலை...''

''அவர் காம்ப்ரமைஸுக்கு வருவாரா?''

''அவரோட லாயர் இதுல ரொம்பவும் இண்ட்ரஸ்ட் காட்றார்... நான் லாயரை சந்திச்சு பேசறேன். அதுக்கு முன்னாடி நீங்க - உங்க பெரியப்பாவைப் பார்த்து பேசிட்டா பரவாயில்லை.''

சுபாகர் யோசித்துவிட்டு சொன்னான் - ''நான் இன்னிக்கோ நாளைக்கோ அவரைப் பார்த்து பேசிடறேன் லாயர் சார். மிருதுளாவோட தற்கொலை விவகாரம் எனக்கு ஒரு பெரிய அதிர்ச்சி. போலீஸ் விசாரணையிலிருந்து இன்னிக்குத்தான் பூர்ணமா மீண்டுட்டு வந்தேன்... மாமனார் எம்மேல ரொம்பவும் கோபமா இருக்கார்... ஒரு நர்சிங் ஹோம் கட்டறதுக்கு



அவரோட ஹெல்ப் கிடைக்குமுன்னு நினைச்சேன். அந்த நினைப்புல மிருதுளா மண்ணை அள்ளிப் போட்டுட்டா... இந்த நிமிஷம் எனக்கு இருக்கிற ஒரே பிடிப்பு... என்னோட பெரியப்பாதான்... அவரை காம்ப்ரமைஸ் பண்ணி பணத்தை வாங்கினாத்தான் முடியும்...''

லாயர் மெல்லிய குரலில் கேட்டார்.

''போலீஸ் மிருதுளாவோட கேஸ் ஃபைலை க்ளோஸ் பண்ணிட்டாங்களா...?''

''சுத்தமா...''

''தற்கொலைக்கான காரணம் என்னன்னு மென்ஷன் பண்ணியிருக்காங்க...?''

''மெண்டல் டிஸ் ஆர்டர்...''

''உங்க நிலைமை ரொம்பவும் பேதடிக் சுபாகர். கல்யாணமாகி ஒரு வாரம்கூட ஆகலை... அந்தப் பொண்ணு எதுக்காக இந்த முடிவைத் தேர்ந்தெடுத்தா...? போலீஸ் மென்ஷன் பண்ணின காரணம் சரியில்லை... அந்தப் பொண்ணு ஏதாவது காதல் விவகாரத்துல மாட்டியிருக்கலாம்...''

சுபாகர் கசப்பாய்ப் புன்னகைத்தான்.

''அப்படியெல்லாம்... இருக்க நியாயமில்லை லாயர் சார். ஷி ஈஸ் லைட்லி டச்சட்... மனசுக்குள்ளேயே ஒரு மூர்க்கத்தனம் இருந்திருக்கு... ஆணோட ஸ்பரிசம் பட்டாலே சிலிர்த்துக் கொள்கிற குணம்... செக்ஸை அருவெறுப்பா நினைக்கிற ஒரு மேனியா... நான் கொஞ்சம் ஃபோர்ஸ் பண்ணினதும் பயந்து போய் - தூக்கில தொங்கிட்டா...!''

''என்னால நம்ப முடியலை சுபாகர்...''

லாயரை எரிச்சலாய்ப் பார்த்துக் கொண்டே எழுந்தான் சுபாகர். ''நான் பெரியப்பாவைப் போய்ப் பார்த்துப் பேசறேன் லாயர் சார். செத்துப் போனவளைப் பத்திப் பேசி என்ன பிரயோஜனம்... அவ என்ன காரணத்துக்காகவோ தற்கொலை பண்ணிக்கிட்டு

செத்துப் போயிட்டா. சாப்டர் ஈஸ்... ஓவர்... உயிரோட இருக்கிற நான்தான் பிரச்சனைகளை சமாளிச்சாகணும்...''


''உங்க பெரியப்பாவை என்னிக்குப் பார்க்கப் போறீங்க...?''

''இன்னும் ரெண்டு நாள்ல...''

''அவரை அப்படி பார்க்கிறதாயிருந்தா... ஆபீசுக்கு போய்ப் பார்க்காதீங்க... வீட்ல போய் சாயந்தரம் ஏழு மணிக்கு மேலே - அவர் ரெஸ்ட்ல இருக்கிறப்போ பாருங்க...''

''சரி... சார்...''

சுபாகர் வெளியே நிறுத்தியிருந்த தன் ஸ்கூட்டர்க்கு வந்தான்



**டேவிட் ஹக்ஸ் (David Hughes) என்பவர் கண்டறிந்த உலகின் முதல் மைக்ரோ போன். ஆண்டு 1878.**

## 16

ஆபரேஷன் அறையிலிருந்து வெளிப்பட்டா டாக்டர் நந்தகுமார். உச்சபட்ச ரேட் வாங்கு கார்டியாலாஜிஸ்ட். அறைக்கு வெளியே காத்திரு பாக்யாவையும் ரகோத்தமராவையும் நெருங்கினார்.

''ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சது அந்தம்மாவோட ஆயுசுல பதினஞ்சு வருஷம் ஏறிடுச்ச ரொம்பவும் பிரமாதமா அமைஞ்ச ஆப்ரேஷன்கள்



இதுவும் ஒண்ணு...''

பாக்யா சந்தோஷத்தில் திணறினாள்.

''தேங்க்யூ டாக்டர்...''

''இப்பவே உள்ளே போயிடாதீங்க... பேஷண்ட்டை ஒரு அரைமணி நேரம் கழிச்சுப் பாருங்க...'' டாக்டர் நந்தகுமார் சொல்லிக் கொண்டே நகர்ந்தார்.

ரகோத்தமராவ் தன் அருகே நின்றிருந்த பாக்யாவை ஒரு புன்சிரிப்போடு பார்த்தார். ''இப்போ உனக்கு சந்தோஷந்தானே பாக்யா...?''

''ம்...''

''இந்த ஆபரேஷனுக்காக கிட்டதட்ட லட்சத்து எழுபதாயிரம் ரூபா செலவு பண்ணியிருக்கேன். இவ்வளவு பெரிய அமௌண்ட்டைக் கொடுத்து நான் யாருக்கும் உதவி பண்ணினதில்லை.''

''தேங்க்யூ சார்...''

''என்னிக்கு மேரேஜை வெச்சுக்கலாம்...?''

''அம்மாவுக்கு உடம்பு தேறட்டும்...''

''எவ்வளவு நாள் ஆகும்?''

''வாரம் பத்து நாள்லே தேறிடுமே ஸார்...''

''கல்யாணத்துக்கான நாளை இப்பவே குறிச்சிட்டா தானே... ஏற்பாடுகளையெல்லாம் கவனிக்க சரியா இருக்கும்...''

''அம்மாகிட்ட இதைப்பத்தி பேசவேண்டாமா ஸார்...?''

''சரி... என்னிக்கு பேசறே..?''

''ரெண்டு நாள் கழிச்சு...''

''அப்புறம் நாளைத் தள்ளிட்டு போகக்கூடாது?''

''இல்ல... ஸார்...''

''சரி... நான் கிளம்பறேன்... ரெண்டு நாள் கழிச்சு... பங்களாவுக்கு நீயே வா. வரும்போது தேதியை முடிவு பண்ணியிருக்கணும்...''

பாக்யா தலையாட்டினாள்.

ரகோத்தமராவ் விடைபெற்று ஹாஸ்பிட்டலின் போர்டிகோவில் நின்றிருந்த காருக்குள் ஏறி கிளம்பினார். அவர் புறப்பட்டுப்போன ஐந்து நிமிடத்திற்குள் திவாகர் ஆபரேஷன் தியேட்டரின் முன் வராந்தாவுக்குள் நுழைந்தான். பாக்யாவைப் பார்த்து புன்னகைத்தான்.

''அவர் புறப்பட்டு போகிறவரைக்கும் அந்தப் பக்கமா காத்திட்டிருந்தேன்...''

பாக்யா அவனை நெருங்கினாள்.

''நீங்க வந்து ரொம்ப நேரமாச்சா...?''

''பதினைஞ்சு நிமிஷம் இருக்கும்...''

''அம்மாவுக்கு ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சது... இப்பதான் டாக்டர் சொல்லிட்டு போறார்...''

''அப்போ... இனிமே பிரச்சனையில்லை...''

''பிரச்னையில்லையா..? இனிமேத்தான் பிரச்னை ஆரம்பம் மிஸ்டர் திவாகர்... ஆபரேஷன் சக்ஸஸ்னு டாக்டர் சொன்னதுமே எம்.டி.கல்யாணத்துக்கான நாளைக் குறிக்க ஆரம்பிச்சுட்டார்.''

திவாகர் சிரித்தான்.

''நடக்காத கல்யாணத்துக்கு நாள் குறிச்சு என்ன பிரயோசனம்?''

''அவர் இந்த விஷயத்துல ரொம்பவும் தீவிரமாயிருக்கார்.''

''என்ன தீவிரம் காட்டினாலும் கல்யாணம் நடக்கப் போறதில்லை. நீங்க எந்த கவலையும் படாமே ஹாய்யா இருங்க... பாக்யா...''

''திவாகர்... நீங்க பேசறது எனக்குப் புரியலை...''

''உங்களுக்குப் புரியாம இருக்கிறவரைக்கும் நல்லது... பை த... பை... இன்னொரு விஷயம் உங்ககிட்டே சொல்ல மறந்துட்டேன்...''

''என்ன...?''

''நான் வேலையை ராஜினாமா பண்ணிட்டேன்...''

பாக்யா ஆச்சர்யமானாள். ''ஏன்...''



''அவர்கிட்ட வேலை செய்ய எனக்குப் பிடிக்கலை... கல்ஃப் கண்ட்ரியில் வேலைக்காக ட்ரை பண்ணிட்டிருந்தேன்... ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் அந்த வேலைக்கான அதிகார பூர்வமான அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் கைக்கு கிடைச்சது...''

''எம்.டி.கிட்டே சொல்லிட்டீங்களா...?''

''சொல்லிட்டேன்... சொன்னதும் ஒரு நிமிஷம் திகைச்சுப் போய் என்னையே பார்த்தார். அப்புறம் 'அவ்வளவு தூரம் போய் வேலை பார்த்துதான் ஆகணுமா?'ன்னு கேட்டார். நான் 'ஆமா'ன்னு சொன்னதும் அவர் 'சரி... போயிட்டு வா'ன்னுட்டார்...''

பாக்யா அவனையே பார்த்தாள்.

''எனக்கு உதவி செய்யறதா சொல்லிட்டு நடுவுல ஜகா வாங்கிட்டு போறீங்களே... இது நியாயமா...?''

''எம்.டி.யோட கல்யாண விஷயத்தைத் தானே சொல்றீங்க...?''

''ஆமா...''

''அவர் உங்களைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டார். அதுக்கு நான் கியாரண்டி...''

''எப்படி சொல்றீங்க...?''

''ஒரு நம்பிக்கையில சொல்றேன். நான் நாளைக்கு காலையில பம்பாய் போய் அங்கிருந்து ஏஜெண்ட் ஒருத்தர் மூலமா ஃப்ளைட்ல ''யேமன்'' போறேன். போய்ச் சேர்ந்ததும் லெட்டர் போடறேன். நீங்க எனக்கு அடிக்கடி லெட்டர் போடணும்...''

''திவா...கர்...''

''உள்ளே அம்மாவைப் பார்க்க போலாமா...?''

''கொஞ்ச நேரம் கழிச்சுதான் டாக்டர் உள்ளே போகச் சொல்லியிருக்கார். அப்படி உட்காருவோமா...?''

வெள்ளை பெயிண்ட் அடித்த நீளமான பெஞ்சைக் காட்டினாள் பாக்யா.

இருவரும் அதை நோக்கிப் போனார்கள்.



17 ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்ட டெலஸ்கோப் (Refracting Telescope)

# 17

மறுநாள் இரவு எட்டு மணி.

ரகோத்தமராவ் ரிஸீவரில் சொல்லிக் கொண்டிருந்தார். ''லாயர் சார்... நீங்க சிரமத்தைப் பார்க்காமே ஒரு நிமிஷம் இங்கே வந்துட்டு போங்களேன்... அந்த சுபாகரோட லாயர் காம்ப்ரமைசேஷனுக்கு வந்தா எப்படி பேசணும்ங்கிறதை நான் உங்களுக்கு சொல்லித் தர்றேன்... அதுபடி நீங்க பேசிருங்க...''

''......''

''இப்பவே வாங்களேன்... நான் ஃப்ரீயாத்தான் இருக்கேன்.''

''......''

''திவாகரா..? அவன் வேலையை விட்டு நின்னுட்டான். ஏதோ கல்ஃப் கண்ட்ரியிலே வேலை கிடைச்சிருக்காம்... சொல்லிட்டு கிளம்பிட்டான்... ஒழியறான் கழுதை... விடுங்க...''

''......''



''வாங்க. உங்களுக்காகத்தான் வெயிட் பண்றேன்...''

ரிஸீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தார் ரகோத்தமராவ். அதே விநாடி அறைக் கதவு தட்டப்பட்டது. ''டொக்... டொக்...''

''யாரது...''

வேலையாள் கண்ணுராஜ் எட்டிப் பார்த்தான். ஆஜானுபாகுவான பாடி. ரகோத்தமராவின் பாடிகார்ட்.

''என்னடா...''

''உங்க தம்பி மகன் சுபாகர்... வந்திருக்கார் ஸார். உங்களைப் பார்க்கணுமாம்... கீழே ஹால்ல காத்திட்டிருக்கார்...''

''அட....'' ஆச்சரியப்பட்டவர் ''வரச் சொல்லு'' என்றார்.

அவன் நகர - நகரப் போகிறவனை மறுபடியும் நிறுத்தினார்.

''டேய்...''

''சார்...''

''அந்த அலமாரியைத் தொறந்து... இஞ்செக்ஷன் போட்டுக்கிற ஊசியையும் மருந்தையும் எம் பக்கத்துல எடுத்து வெச்சுட்டு போ...''

அவன் உள்ளே வந்து அலமாரியைத் திறந்து மருந்து ஆம்பியூல்லையும் ஸிரிஞ்ச் ... ஊசி எல்லாவற்றையும் டீபாயின் மேல் எடுத்து வைத்துவிட்டுப் போனான்.

சரியாய் அரை நிமிஷம் கழித்து -

சுபாகர் மேலே வந்தான்.

''வா சுபாகர்...'' ரகோத்தமராவ் ஆம்பியூல் பாட்டிலைக் கையிலெடுத்து உருட்டிக் கொண்டு புன்னகையோடு வரவேற்றார்.

சுபாகர் பேசாமல் வந்து உட்கார்ந்தான். அவர் தொடர்ந்து கேட்டார். ''விஷயம் கேள்விப்பட்டேன். கல்யாணமான மூணாவது நாளே பெண்டாட்டிக்காரி தற்கொலை பண்ணிக்கிட்டாளாமே. நல்ல பசையான இடம். ஒரே பொண்ணு... நீ அதிர்ஷ்டக்காரன்னு நான்

நினைச்சேன்... இப்பத்தான் தெரியுது நீ துரதிர்ஷ்டக் கட்டைன்னு..."

"பெரி... ய.... ப்... பா..."

"என்ன... சொல்லு."

"நான் கேஸை வாபஸ் வாங்கிக்கறேன்... நீங்க பார்த்து எப்படி செட்டில் பண்ணினாலும் ஒத்துக்கிறேன்... நான் சீக்கிரமே க்ளினிக் ஒண்ணு கட்டணும்... இல்லேன்னா நான் படிச்ச படிப்புக்கு மதிப்பில்லாமே போயிடும்..."

"இந்த புத்தி எம்மேல கேஸ் போடறதுக்கு முந்தி இருந்திருக்கணும்... பரவாயில்லை... நம்ம லாயர் இப்போ வந்துடுவார். வந்ததும் பேசி ஒரு முடிவுக்கு வரலாம்... ஏதாவது சாப்பிடுறியா...?"

"வேண்டாம் பெரியப்பா..."

"அட... வராதவன் வந்திருக்கே... ஏதாவது கூலா சாப்பிடு..." சொல்லிவிட்டு இண்டர்காமின் ரிஸீவரை எடுத்து மெல்லிய குரலில் "ஒரு லெமன் ஜூஸ்" என்றார்.

சுபாகர் அப்போதுதான் அந்த டீபாயின் மேலிருந்து ஸிரிஞ்சையும் - ஆம்பியூல் மருந்து பாட்டிலையும் பார்த்தான்.

"என்ன பெரியப்பா இது...?"

"இன்சுலின் இஞ்செக்ஷன். போட்டுக்கிறதுக்காக எடுத்து வெச்சேன்..."

"நீங்களே போட்டுக்குவீங்களா...?"

"ஆமா. செல்ஃப் இஞ்செக்ஷன்தான்...! நம்ம ஃபேமிலி டாக்டர் அடிக்கடி வெளியூர் போயிடறார்ன்னு நானே ஊசி போட்டுக்க பழகிட்டேன்..."

"இப்போ போட்டுக்கப் போறீங்களா...?"

"எடுத்து வெச்சேன்..."

"நான் போட்டு விடறேன் பெரியப்பா..."

இப்பெல்லாம் இந்த டயாபடீஸைக் கட்டுப்படுத்த வேற ஒரு மெடிசன் வந்திருக்கு... அது இம்போர்ட்டட்... இனிமேத்தான் இந்தியாவுக்கு வரணும்..."



ஆம்பியூல் பாட்டிலையும் - ஸிரிஞ்சையும் கையில் எடுத்துக் கொண்டான் சுபாகர். ஸிரிஞ்சில் மருந்தை ஏற்றிக் கொண்டு அவருடைய வலது புஜத்தைப் பற்றினான்.

"சரியா... நேரம் பார்த்து எனக்கு இன்சுலின் இஞ்செக்ஷன் போடறதுக்காகவே வந்திருக்கே..."

ரகோத்தமராவ் சொல்ல சுபாகர் புன்னகைத்தான்.

"லாயர் இப்போ வந்துடுவாரா பெரியப்பா...?"

"வந்துடுவார்..."

"நான் உங்ககிட்ட எதுவுமே அதிகமா கேக்கப் போறதில்லை. நான் ஒரு க்ளினிக் கட்டற அளவுக்கு..."

"நான் ஏற்பாடு பண்ணித் தர்றேன்... நீ கேஸை மொதல்ல வித்ட்ரா பண்ணு."

சுபாகர் தலையாட்டிக் கொண்டே - அந்த இன்சுலின் இஞ்செக்ஷனை, 'சுருக்' கென்று அவர் புஜத்தில் பாய்ச்சினான்.

ரகோத்தமராவ் சின்னதாய் முகம் சுளித்தார்.

மிக மெதுவாய் - ஊசியை உருவினான் சுபாகர்.

அதே விநாடி -

மாடிப்படிகளில் யாரோ ஏறி வரும் சத்தம் கேட்டது.

"லாயர் வந்துட்டார் போலிருக்கு..." சொன்ன ரகோத்தமராவ் சட்டென்று இரண்டு கைகளாலும் மார்பைப் பற்றிக் கொண்டார். இதயத்தில் எதுவோ கனமாய் அடைத்தது.

"ஹக்..."

கட்டிலில் உட்கார்ந்தபடியே முன்பக்கமாய் சுருண்டார். வாய் ஆவேசமாய் குழறியது. "பா... வி...! உன்... பு... த்... தி... யை... காட்... ட்டிட்... டி... யேடா... என்... ன ஊசிடா போ... ட்... டே...?"

"பெரியப்பா..."

சுபாகர் அதிர்ந்து நிற்கிறபோதே.

குடும்ப லாயர் உள்ளே நுழைந்தார். 'ஹலோ...' என்று சொல்லப்போனவர் முகம்மாறி ரகோத்தமராவிடம்

ஓடினார்.

''ஸார்...'' தாங்கிப் பிடித்தார்.

''லா... ய... ர்... ஸார்... இந்த ராஸ்... கல்! எ... ன... க்...கு என்ன... வோ... ஊசி... போ... ட்... டுட்... டான்... இந்...த... கொ... லை... கா... ர... னு...க்கு என்... சொ... த்து... து... ல ஒரு பைசா... கூட... தரா... தீங்க! எ... ன்... னைக்... கொ...ன்...னவன் இவன்தான். போ... லீ... ஸ்...ல சொ... ல்... லி... இ... து... என்னோட மரண... வாக்கு... மூலம்...''

ரகோத்தமராவின் விழிகள் நிலைத்துப் போக -

சட்டென்று தலையை சாய்த்தார்.

லாயர் பார்வையை மெல்ல சுபாகரின் பக்கம் திருப்பினார். சுபாகர் அலறினான்... ''நோ... லாயர்... ஸார்... பெரியப்பாவை நான் கொல்லலை.''

அலறிக்கொண்டே ஓட முயன்றவனை, சத்தம் கேட்டு மேலேறிவந்து அறைக்குள் நுழைந்த கண்ணுராஜ் எஃகுத் தனமாய் பிடித்தான். லாயர் கத்தினார் ''கண்ணுராஜ்... ஆளை விடாதே... நான் போலீஸ்-க்கு போன் பண்றேன்.''

லாயர் அருகேயிருந்த டெலிபோனின் ரிஸீவரை எடுத்தார்.



**18 ஆம் நூற்றாண்டில் சீனாவில் பயன்படுத்தப்பட்ட விசிறி.**

# 18

அதே விநாடிகளில் -



விமானத்தில் யேமன் நாட்டை நோக்கிப் பறந்து கொண்டிருந்த திவாகர் தன் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தான்.

மனசுக்குள் ஒரு திகில் கலந்த சந்தோஷம் புரண்டது. உடம்பின் ஒவ்வொரு செல்லுக்கும் அந்த உணர்ச்சி பரவ உற்சாகம் தொற்றிக் கொண்டது.

'சயனைட் விஷத்தில் தோய்த்து எடுக்கப்பட்ட ஊசி இந்நேரம் ரகோத்தமராவின் தோள்பட்டையில் ஏறியிருக்குமா...?'

அவனுடைய மூளை அடித்துச் சொல்லியது.

'கண்டிப்பாய் ஊசி ஏறியிருக்கும்!'

'ரகோத்தமராவ் எதை மறந்தாலும் தினசரி ஒரு இன்சுலின் ஊசி போட்டுக் கொள்ள மறக்கமாட்டார்.'

'எப்படியும் நாளைய தமிழ் பேப்பர்களில் 'இயற்கை எய்தினார்' விளம்பரத்தில் ரகோத்தமராவின் போட்டோவை பார்க்கலாம்...'

'பாக்யாவுக்கு இனி விடுதலை.'

'அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையட்டும்.'

திவாகர் யோசிக்க -

மனதின் மூலையில் இருந்து ஒரு குரல் ஒலித்தது.

'அந்த நல்ல வாழ்க்கையை நீயே ஏன் அவளுக்கு தரக்கூடாது...?'

'நானா..?'

'ஏன் உனக்கென்ன குறைச்சல்..?'

'பாக்யா என்னை ஏற்றுக் கொள்வாளா?'

'யேமன் சேர்ந்ததும் ஒரு கடிதம் எழுதிப்பாரேன்... கண்டிப்பாய் உனக்கு 'ஓகே!' பதில் கிடைக்கும்...!'

'சரி... பாக்யாவுக்கு எப்படி கடிதம் எழுதலாம்.'

திவாகர் முதல் வரியை யோசிக்க ஆரம்பித்தான்.

விமானம் அரபிக் கடலுக்கு மேலே ஒரு அசுரப் பறவையாய் பறந்து கொண்டிருந்தது.

**(முற்றும்)**